பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

மாலை 3	ஞாயிறு 31-3-40 பிரமாதிஞு பங்குனிமீ 18உ	முத்து 21

பொருள் அடக்கம்

விஷயம்		பக்கம்
உலக வர்த்தமானம்	... ...	558
போகிற போக்கில்	... ...	560
இது தெரியுமா?	... ...	562
உதிர்ந்த மணிகள்	... ...	563
அதிகப் பிரஸங்கம்	... ...	564
கிராமப் பொருளாதாரம்	... ... ஜி. பாலசுப்ரமண்யம்	566
அன்றைய வியாபாரம்	... ... வே. ரா. சுந்தரராமன் எம். ஏ.	570
தாய் நாடு	... ... எஸ். சங்கரன்	573
சிறுவர் பகுதி	... ... பார்வதி	576
பக்த சேதா	... ... "தாசு"	578

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

உலக வர்த்தமானம்

ஐரோப்பாவில் ஹிட்லர்—முஸோலினி சந்திப்பைப்பற்றி அர்த்த புஷ்டியுடன் கூடிய பதங்களை உபயோகித்து விஸ்தாரமாகப் பேசி வருகிறார்கள். அச்சுக்காரர்களான இரண்டு சர்வாதிகாரிகளும், மூன்றாவது சர்வாதிகாரி ஸ்டாலினுடன் சேர்ந்துகொண்டு மத்திய ஐரோப்பாவில் பிரிட்டிஷ் ஆதிக்கமே ஓங்க விடாமற்படிக்குச் சூழ்ச்சி செய்து வருகிறார்கள் என்பது ஒரு சாரார் கருத்து. ஆனால் உண்மையில் சர்வாதிகாரிகளின் போக்கு கண்டுகொள்ள முடியாததாக அவ்வளவு கூடமாக இருக்கிறது. ஹிட்லர், பிரென்னர் சந்திப்புக்குப் பிறகு கூறியதிலிருந்து பார்த்தால், அச்சுக்காரர்களான ஹிட்லர், முஸோலினி இவர்கள் தங்கள் பரஸ்பர ஸ்நேக பாவத்தை ஊர்ஜிதப்படுத்தினார்கள் என்று தெரிகிறது.

ஸம்னர் வெல்ஸும் தன் சுற்றுப்பிரயாணங்களை முடித்துக் கொண்டார். அமெரிக்க தலைவர் ரூஸ்வெல்ட் ஸம்னர் வெல்ஸின் சுற்றுப் பிரயாணத்தின் முடிவைப்பற்றித் தெளிவான ஒரு அறிக்கை வெளிவிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ரூஸ்வெல்டின் இவ்வறிக்கை, சமரஸத்தை நிலைநாட்டத் தகுந்த பலம் கொண்டதாக இராது என்பது பல ஐரோப்பிய ராஜதந்திரிகளின் கருத்து. கடைசியாக வந்த செய்தி ரூஸ்வெல்ட் அறிக்கை வெளிவிடப் போவதில்லை என்று கூறுகிறது.

ஹிட்லர் இப்பொழுது இருக்கும் நிலைமை மிகவும் கேவலமானதாகத் தோன்றுகிறது. முஸோலினியையும் தட்டிக் கொடுக்கிறார்; ஸ்டாலினையும் தட்டிக் கொடுக்கிறார். ஆனால் யாரிடமிருந்து அவருக்கு உண்மையான உதவி கிடைக்கும் என்பது அவருக்கே தெரியவில்லை. ரஷ்யா, ஜெர்மனிக்கு உதவிசெய்யாது என்பதற்குப் பல அறிகுறிகள் தென்படுகின்றன.

இதனிடையில் ஸ்காண்டநேவியன் பிராந்தியத்தையும் ருமேனியாவையும் ஹிட்லர் தேள் கொட்டுவது போல் தன் சுய வியாபார அபிவிருத்தி நோக்கத்துடன் கொட்டிக் கொண்டே இருக்கிறார்.

நேச நாடுகளோ ஹிட்லரின் நிலைமையை உணர்ந்து விட்டன என்று தெரிகிறது. மேற்குயுத்த முனையில் ஜெர்மன் போர்வீரர்கள் ரேடியோவில் "சமரஸம் செய்து கொள்ளுங்கள், சமரஸம் செய்து கொள்ளுங்கள்" என்று கூவினராம். ஆனால் பிரெஞ்சுப் போர்வீரர்கள் அதற்குப் பதிலாக பீரங்கிகளை விட்டெறிந்தனராம்.

லார்டு ஹாலிபாக்ஸ் ஆக்ரோஷத்துடன் நாஸீயத்தை எதிர்த்துப் பேசினார். நாஸீயத்தை ஒழித்தால் தான் ஆக்கிரமிப்பு ஒழியும் என்று கர்ஜித்தார். யுத்தத்தின் இறுதியில் எல்லா தேசங்களுக்கும் நியாயம் பிறக்கும்போது பின்லாந்துக்கும் நியாயம் கிடைக்கும் என்று கூறினார். ரஷ்யாவின் படுமோசத்தைக் கண்டித்துப் பின்லாந்துக்குத் தைர்யமளித்தார்.

உள் நாட்டில்

இந்தியாவில், ராம்காரில் இவ்வருஷ காங்கிரஸ் கூடிக் கலைந்தது. இவ்வருஷக் கூட்டத்தில் காந்திஜி என்றுமில்லாத ஓர் புதிய சக்தியுடன் காங்கிரஸ் பிரதிநிதிகளுக்குத் தன் அஹிம்ஸா முறையைப் போதித்தார். தன் தலைமை, இந்தியர்களுக்குத் தேவையாக இருந்தால் இந்தியர்கள் எல்லோரும் ஒன்றுபட்டு, பலாத்

காரமன்னியில் போர் செய்யத் தயாராக இருக்கவேண்டும் என்று கூறினார். சிறிதளவாவது இதில் சந்தேகம் இருந்தால் தன் அஹிம்ஸாப் போரை ஆரம்பிக்கப் போவதில்லை என்று தெளிவாக எடுத்துரைத்தார்.

கூட்டத்தில் தலைமை வகித்த மௌலானா அபுல்கலாம் ஆஸாத் இந்து—முஸ்லீம் ஒற்றுமையைப்பற்றி வெகு தெளிவாகச் சரித்திர பூர்வமான உதாரணங்களுடன் பிரசங்கம் செய்தார். இந்தியாவை இரண்டாகப் பிரிக்கும் முயற்சி வீண்தான் என்று எடுத்துக் காட்டினார்.

லாகூரில் கூடிய முஸ்லீம் லீக் மஹாநாடு வெகு தீவிரமாக பல தீர்மானங்களை நிறைவேற்றிற்று. லீக் தலைவர் ஸ்பஷ்டமாக இந்தியாவை இரண்டாக வெட்டிவிட வேண்டும் என்று கூறி விட்டார். "முஸ்லீம் இந்தியா, இந்து இந்தியா, என்று இரண்டு ராஜ்யங்கள் இருந்தால் அதனால் அவ்விரு ராஜ்யங்களும் ஒற்றுமையாக இராது என்று யார் சொன்னார்கள்?" என்று கேட்கிறார். அதோடு நிற்கவில்லை. இப்படிப் பிரிப்பதற்கு எதிர்ப்படும் எதிர்ப்புகளை பலத்துடன் வீழ்த்தத் தயாராக இருக்கவேண்டும் என்று லீகர்களை வேண்டிக்கொள்ளுகிறார்.

ஸிந்து மாகாணத்தில் மிகுந்த பரபரப்புக்குப் பிறகு அல்லாபக்ஷ் மந்திரி சபை ராஜீநாமா செய்தது. புது மந்திரி சபையின் பிரதம மந்திரி மீர் பந்தே அலீ கான். இவர் பிரதம மந்திரியாக வந்த பிறகு சட்டசபை முதன்முதல் கூடிய சமயத்தில் ஸிந்து காங்கிரஸ் சட்ட சபை அங்கத்தினர்கள் என்ன செய்வார்களோ என்ற பிரச்னை கிளம்பி இருந்தது. ஏனெனில், புதிய மந்திரி சபை ஜீவித்திருப்பதற்குக் காங்கிரஸ் அங்கத்தினரின் ஆதரவு வேண்டும். முதன்முதலில் சட்டசபையில் பேசும்போது பிரதம மந்திரி தன் கொள்கைகளை விவரித்துக் கூறினார். மன்ஸில்கா விவாதத்திற்கு விசாரணை நடத்த ஏற்பாடு செய்வதாகக் கூறினார். மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வரப் போவதாகக் கூறினார். இன்னும் சில ஜனங்களுக்கு நன்மை தரக்கூடிய சீர்திருத்தங்களைக் கொண்டு வரப் போவதாகக் கூறினார். சட்ட சபை அங்கத்தினர்கள் இத்தீர்மானங்களை ஆதரவுடன் செவி கொடுத்து கேட்கவில்லை என்று தெரிகிறது. காங்கிரஸ் அங்கத்தினர்களின் அபிப்ராயம் தெரியவில்லை.

தமிழ் நாட்டில்

ஸ்ரீ வி. டி. சவர்க்கார் சேலத்தில் நடந்த ஹிந்து மகா சபைக் கூட்டத்திற்குப்பின் சென்னைக்கு விஜயம் செய்தார். சென்னையில் அவருக்குப் பிரமாதமான வரவேற்பு. அவர் செய்த பிரசங்கங்கள் தமிழர் உணர்ச்சியை அதிகரித்தன. ஹிந்து மகா சபைத் தலைவர், முஸ்லீம் லீக்கின் கேட்பாரற்ற போக்கைக் கண்டித்து, தாய் நாட்டை இரண்டாக வெட்ட வேண்டுமென்கிற லீக் கோரிக்கையை ஹிந்துக்கள் மிக்க பலமாகக் கடைசி வரையில் எதிர்த்தே தீர வேண்டும் என்று கர்ஜித்தார்.

ஜின்னா, லாகூரில் செய்த தீர்மானத்துக்கு பதிலாக வீர தாமோதர சவர்க்கார் சென்னை கடற்கரையில் செய்த பிரசங்கத்தில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் பிரஸன்னமாயிருந்தார்கள். ஹிந்துக்களின் முக்கியமான கடமை ஜின்னாவின் இரு தேசத் தீர்மானத்தை எதிர்ப்பதுதான் என்று மறுபடியும் கூறினார்.

ஜின்னாவின் அசட்டுத்தனமான போக்கை, சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியரும் கண்டித்து ஒரு அறிக்கை வெளியிட்டார். "ஜின்னா வேறு எதை கேட்டாலும் கொடுத்து விடலாம். தேசத்தை இரண்டாகப் பிரிப்பதை மாத்திரம் அவர் சொல்லாமல் இருக்க வேண்டும்" என்று கூறினார். இப்படிப் பிரிப்பது கேவலம் அசட்டுத்தனமான காரியம் என்று விளக்கிக் காட்டினார்.

தமிழ் நாட்டில் சென்ற வாரம் கம்பர் திருநாள் காரைக்குடியில் கொண்டாடப்பட்டது. ஸ்ரீமான் பி. ஸ்ரீ. ஆச்சாரியார் தலைமையில், பண்டிதர்கள் கூடி கம்பன் சிறப்பை எடுத்துக் கூறினார்கள்.

போகிற போக்கில்



"பட்டகாலே படும் கெட்ட குடியே கெடும்" என்ற பழமொழியை அறியாதவர்கள் தமிழகத்திலில்லை. பல புராதன மொழிகளை நாம் வட்டுச்சுரக்காய்போல் அனுபவித்து வருகிறோம். ஆனால் அவைகள்போல் இந்த பழமொழி இல்லை. இதைச் சுவானுபவத்திற்குக் கொண்டுவராதவர்கள் இவ்வுலகில் ஒருவரும் இல்லை—அரசன் முதல் உழவன் வரையில்.

* * *

இந்த பழமொழியை தீர்த்தாடனத்திற்கும் கோவில் தரிசனத்திற்கும், யாத்திரைக்கும் அன்வயிக்கலாமென்று எனக்குத் தோன்றுகிறது. இந்த அனுபவத்தை ஒட்டித்தான் எப்பொழுதும் கன்யாகுமாரி முதற்கொண்டு ரிஷி கேசம் வரையில் சஞ்சரித்துக்கொண்டிருக்கும் பைராகிகள் பிறக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

ஒரு க்ஷேத்திரம் போய் தரிசித்தால் மற்றொரு க்ஷேத்திரம் காந்தம்போல் நம்மை இழுக்கும். இப்படியே கொஞ்ச காலம் ஈசனிடம் பற்றுதல் ஏற்பட்டால் இரும்பும் காந்தமாய் விடுவதுபோல் பைராகிப் பிறப்பு ஏற்பட்டு விடுகிறது. இந்த அநித்திய உலகில் சிந்தனையே நித்தியமாய் அமைந்து விடுகிறது.

* * *

தை அமாவாசை புண்யகாலத்தில், காவேரி சங்க முகத்தில் ஸ்நானம் செய்து ஸேது ஸ்நான பலனை யடைந்து, ஆசாரியாள் அருளையும் பெற்று, கூவம் நதிக் கரையில் ஸங்கமுகத்தில் தேங்கி நிற்கும் சென்னைக்கு, புஷ்பத்தோட்ட வேலையிலிருந்து தன் இருட்டறைக்குத் திரும்பும் கைதிபோல், நான் திரும்பினேன்.

திரும்பினேனோ இல்லையோ, ஒரு மூட்டை தபால் காத்துக்கொண்டிருந்தது. இந்தக் குவியல் தலையில் ஓர் நீண்ட அழகிய கவர் ஏறி சவாரி செய்துகொண்டிருந்தது. திருப்பதி ஓரியண்டல் இன்ஸ்டிட்யூட் டைரெக்டராக உத்தம தொண்டு செய்துவரும் என் நண்பர் ராவ் பகதூர் கே. வி. ரங்கஸ்வாமி ஐயங்காரிடம் இருந்து ஓர் அழைப்பு வந்திருந்தது. அவர் அழைப்பையும், என் பழைய நண்பர் ராவ் பகதூர் கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் அழைப்பையும் தட்டுக் கழிக்க தைர்யம் உள்ளவர்களை நான் இது வரையில் சென்னை ராஜதானியில் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. அவர்கள் அழைப்பு கட்டளை; கட்டளை அழைப்பு. நான் ராவ் பகதூர் கே. வி. ரங்கஸ்வாமி அய்யங்காரிடம் நேரிடையில் வாசிக்காவிட்டாலும் அவர் என்னைத் தன் மாணவனாகவே கருதுகிறாரென்று எண்ணுகிறேன். நானும் அப்படியே நடந்து கொள்ளுகிறேன். இவரை நினைக்கும்பொழுதெல்லாம் எனக்கு புரொபஸர் சுந்தரராமன் ஞாபகம் அடிக்கடி வருகிறது. அவரைவிட உத்தமப் பிறப்பு நமது நாட்டில் சமீபத்தில் இல்லை.

இருந்தாலும் திருப்பதி போகவேண்டுமா? சென்னையில் விடாத உழைப்பு இருக்கிறதே. பாரத மணி உழவில் ஓய்வு ஒழிவு இல்லையே. தவிர இடைவிடாமல் பத்தாயிரம் மைல் மூன்றாவது வகுப்புப் பிரயாணத்தின் ஆயாஸம் மனதைச்

சலிக்கச் செய்து கொண்டிருந்தது. ஆனும் ஏழுமலையானைத் தரிசிக்கும் அருளும் பாக்கியமும் கிடைக்குமோ? தானுகவரும் போது தள்ளி விடலாமோ! சிதம்பர தரிசனத்திற்கும் வேங்கடாசலபதியின் சேவைக்கும் இளைப்பும் களைப்பும் உண்டோ? இது அழியாச் செல்வம் அல்லவோ?

* * *

இப்படி நிற்கும் சமயத்தில் ஆச்சார்யாளிடமிருந்து அருள் குவியலாய் ஓர் உத்திரவு கிடைத்தது. காமகோடி மடத்திற்குப் பிரதிநிதியாக திருப்பதியில் நடக்கும் ஓரியண்டல் கான்பரன்ஸுக்கு நான் போகவேண்டு மென்று உத்தரவு. ஸம்ஸ்க்ருத ஞானமற்ற, எவ்விதத்திலும் உண்மையான வித்வத்தில்லாத, நான்—சில டவுன் பசுக்கள் தீனி இல்லாமலே பால் கறக்கும்; பாலில் ருசி யில்லாமல் போனுல் பாதகம் இல்லை; காப்பியில் தானே கலந்து சாப்பிடப் போகிறார்கள். தனிப் பால் யார் சாப்பிடுகிறார்கள் இந்த நாளில்?—எப்படி இந்த வித்வத் சபையில் சேர்ந்து பஞ்ச கச்சம் அணிந்து நாமம் போட்டு—திருப்பதியில் எல்லாம் விஷ்ணு மயம்—சேர்ந்து நிற்பது என்று கலங்கினேன். புன்சிரிப்புடன் 'அக்கரையில்லை போ' என்ற உத்திரவு அளித்ததுபோல் எனக்குத் தோன்றிற்று.

கங்கையின் வண்டல் மண் இன்னும் போகாத என் கம்பளியையும், மடிசஞ்சியையும் கட்டினேன். திருப்பதிக்குக் கிளம்பினேன். மறுபடியும் பம்பாய் எக்ஸ்பிரஸில் போக ஸெண்ட்ரல் ஸ்டேஷன் போனேன். எக்ஸ்பிரஸ் முழுதும் ஓரியண்டல் கான்பரன்ஸ் பிரதிநிதிகள் மயமாய் இருந்தது. ஆனுல் அவர்கள் எல்லோரும் பண்டிதர்களா யிருந்தபடியால் ஏழுமலையான் சப்தம் மாத்திரம் கேட்கவில்லை. எல்லோரும் இந்தியன் எக்ஸ்பிரஸை கையில் பிரித்து வைத்துக் கொண்டு வாசித்து வந்தார்கள். சேம்பர்லேன் திருப்தி யடைந்து நீண்ட பற்களுடன் அகண்ட சிரிப்பைக் காட்டும் படத்தை மாத்திரம் முதல் பக்கத்தில் கண்டேன். பின்லாந்து தோற்றுப்போய் ரஷ்யாவுடன் சமாதானம் முடிந்துவிட்டதென்று தெரிந்துகொண்டேன். நமது பிரிட்டிஷ் பிரதம மந்திரியின், தன் மனோபாவத்தில் இருக்கும் நம்பிக்கையை யார் எக்காலத்தில், அழிக்கமுடியும்?

* * *

வெகு அழகாய் ஓரியண்டல் கான்பரன்ஸ் நடந்து முடிவடைந்தது. ராவ் பகதூர் கே. வி. ரங்கஸ்வாமி அய்யங்காருக்கும், அவருக்கு ஒத்தாசையாயிருந்து நடத்தினவர்களுக்கும் நம்முடைய மனமார்ந்த வந்தனம்.

வஞ்சிமாநகர் வாக்குவாதத்தில் மகா வித்வான் ரா. ராகவையங்கார் சொற்பொழிவு தேன் மொழி. வேற்றுமையை ஒற்றுமைப்படுத்தி, ஆராய்ச்சியில் இவர் பார்க்கும் பார்வை (Synthetic wish) வேறு ஒருவரிடத்திலும் நான் இதுவரையில் கண்டதும் இல்லை, கேட்டதுமில்லை. இவர் மேல்நாட்டில் பிறந்திருந்தால் இன்னும் மிக்க உன்னத ஸ்திதியை அடைந்திருப்பார். தமிழ் நாட்டில் பிறந்திருப்பதால், ஆற்றங்கரையைக் காக்கும் நாணல், நீர் நொச்சிபோல், அரசியல் வெள்ளம் வரும்போதெல்லாம் புன்சிரிப்புடன் தலை வணங்கிக் கரையைக் காப்பாற்றி, ஆராய்ச்சியைப் போஷித்து, மகா வித்துவானுய் விளங்குகிறார்.

* * *

ஏழு மலைகளைக் கடந்து ஏழுமலையானை அடைந்தேன். விச்வரூப தரிசனம் கண்டேன். தாய் நாட்டுக்கு இந்நெருக்கடியில் ஈசனருளை வேண்டினேன். ஸிம்ஹம் போல் மலை யேறிப் பகவானைத் தரிசிக்க வந்த 'டைகர்' வரதாச்சாரியார், ஏழுமலையான் சந்நிதியில் தன்னை யறியாமல் மெய் மறந்து ஒரு பாட்டைப் பாடினர். அவர் பக்கத்தில் நானும் மெய்மறந்து நின்றேன்.

மணி

இது தெரியுமா?

அதிகமாக ரஸ்தாக்கள் போடத் தீர்மானம்

இந்தியா கவர்ன்மெண்ட் ரோட் பண்டுக் காக ரூ. 10,27,000 தொகையை சாங் ஷன் செய்தது.

சென்னை மாகாணத்தில் ரஸ்தாக்கள் போடவும், சீர்திருத்தங்கள் செய்யவும் 133 திட்டங்கள் போடப்பட் டிருக்கின் றன. மத்திய ரோட் ஸ்டாண்டிங் கமிட்டி இவற்றை ஆமோதித்தது. இந்த 133 திட்டங்களைக் கைக்கொண்டு வேலை செய்ய சுமார் ரூ. 40,70,000 செலவாகும் என்று மதிப்பிடப்படிட்ருக்கிறது. இந்தத் தொகையில் ரூ. 30,75,000 மாகாண சர்க்கார் மத்திய ரோட் பண்டில் கட்டி யிருந்த தொகையிலிருந்து எடுத்துக் கொள்ளப்படும். இன்னும் ரூ. 7,14,000 கடன் மூலமாகவும், ரூ. 1,47,000 ஸ்தல ஸ்தாபனங்களின் கட்டணங்களிலிருந் தும், ரூ. 50,000 மாகாண வருமானத்தி லிருந்தும், ரூ. 84,000 மதராஸ் தென் னிந்திய மராட்டா ரயில்வே கம்பெனி வாராவதிகள் கட்டுவதற்காகக் கொடுப் பதிலிருந்தும் எடுத்துக் கொள்ளப்படும்.

அதிகமாக வாராவதிகள் கட்டுவதில் தான் இந்தத் தொகைகள் செலவழிக்கப் படும் (ரூ. 23,68,000). ஆனால் ரஸ்தாக்களை மராமத்து செய்வதற்கும் ரூ. 3,21,000 எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. 1939-40ம் வருஷத்தின் முடிவில் சென்னை ரஸ் தாக்களுக்காகப் பகுத்து வைத்த தொகை ரூ. 1,74,06,000. எனவே, இப்பொழுது இருக்கும் திட்டப்படி வேலையை முடிக்க இன்னும் வேண்டிய மீதித் தொகை ரூ. 35,74,000.

இப்பொழுது சென்னையில் அமுலி லிருக்கும் திட்டம் 1937-38 லிருந்து தொடங்கும் ஓர் ஏழு வருஷ திட்டம். இப்பொழுது செய்யவேண்டிய ரூ. 35,74,000 செலவில் கௌதமி-கோதாவரி வாராவதிக்கு செலவழிக்க வேண்டிய இந்த வாராவதி கட்ட மதிப்பு கள் போட்டு வருகிறார்கள் தகுந்த ஏற் பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. ரூ. 16,00,000 அடங்கி இருக்கிறது. இந்த வாராவதி கட்ட, தீர்மானமாய் விட்டாலும், வேலை ஆரம்பிக்கச் சிறிது காலத் தவக்கம் ஆனாலும் ஆகலாம்.

* * *

யுத்த காலத்தில் புறாக்கள்

சென்ற மகா யுத்தத்தில் புறாக்கள் பல உயிர்களைக் காப்பாற்றின. ஆர்கானி லிருந்த அமெரிக்க "லாஸ்ட் பட்டாலி யன்" மொத்த பேரையும் ஒரு பிரிட்டிஷ் புறாதான் காப்பாற்றிற்று. யுத்தம் முடிந் ததும், இந்த பறவையை யூனைடெட் ஸ்டேட்ஸுக்கு எடுத்துச் சென்றார்கள். அங்குதான் அது தன் மிகுதி காலத்தைச் சுகமாகக் கழித்ததாம். அது இறந்த பிறகு அதன் சவத்தை வாஷிங்டன் மியூஸியத் தில் வைத்திருக்கிறார்களாம்.

1921 ம் வருஷத்தில்தான் பிரிட்டிஷ் செய்தி கொண்டு போகும் வேலைக்குப் புறா வேண்டியதில்லை என்று நிச்சயிக்கப் பட்டது. அதற்கு முன் புறாக்கள் இவ் வேலை செய்வதில் ஜனங்களுக்கு மிகுந்த நன்மை யளித்தனவாம். இப்பொழுதுகூட அவை போன்ற புறாக்களைப் பழக்கி வைத்துக் கொள்ளவேண்டும். சில அவசர காலங்களில் வேண்டியிருக்கலாம்" என்று ஒருவர் கூறுகிறார்.

முத்துமாலை

பாரதமணியின் 26 முத்துகள் ஒன்றாக கோர்க்கப்பட்ட முதல் மூன்று மாலைகள் பைண்டு வால் யூம்களாக தயாராகி இருக்கின்றன. ஒவ்வொன்றின் விலையும் இரண்டே ரூபாய் தான். இன்றே உங்கள் மாலையைப் பெற்றுக் கொள்ளுங் கள்.

உதிர்ந்த மணிகள்

தொழில் விருத்தி என்பது விஞ்ஞான ஆராய்ச்சிசாலைகளைத் தொழிற்சாலைகளாக மாற்றுவதனால் உண்டாகாது. தொழிற் பயிற்சியையும், விஞ்ஞான ஆராய்ச்சியையும் ஒன்று சேர்ப்பது என்பது அத்யாவசியமானது. இந்தக் கூட்டுறவுதான் தொழிலபிவிருத்திக்கு உதவி செய்யும். இதை எவ்வளவு சீக்கிரத்தில் நமது தலைவர்களும் அரசியல் வாதிகளும் உணர்கிறார்களோ, அவ்வளவுசீக்கிரத்தில் நமது தேசத்தின் தொழில் அபிவிருத்தியடையும்.

—ஸர் ஸி. வி. ராமன்

* * *

விரோதியைத் தொலைத்து விடவேண்டும் என்கிற லக்ஷியத்தோடு மாத்திரம் இந்யுத்தத்தைநடத்துவதாக இருந்தால், அப்படி செய்வது வீண் பிரயாசையாகும். இருபது வருஷங்களுக்கு முன் ஓர் நிரந்தரமான சமாஸம் ஏற்படும் என்ற நம்பிக்கையின்பேரில் லக்ஷக்கணக்கான மக்கள் மாண்டனர். இந்தத் தலைமுறை ஜனங்களின் கோரிக்கைகளுக்கிணங்கி நடக்க வேண்டுமென்றால், விரோத மனோபாவமும், யுத்த தடபுடல்களும் நம் தூரதிருஷ்டியை மறைக்கக் கூடாது. யுத்தம் அடிக்கடி வராமல் தடுக்க ஒரே வழி; ஒரு தேசத்தின் சமூகத்துக்கு நியாய உரிமை அளிப்பதும், தேசங்களுக்குப் பயமற்ற வாழ்க்கையைக் கொடுப்பதுமேதான்.

—ஸர் எஸ். ராதாகிருஷ்ணன்

* * *

நமது ஹிந்து சிநேகிதர்களோ அல்லது பிரிட்டிஷ் சர்க்காரோ ஏன் நம்முடைய பாதையில் முட்டுக் கட்டைகள் வைக்கிறார்கள் என்பதுதான் தெரியவில்லை.

—மஹம்மத் அலி ஜின்னா

* * *

எப்பொழுது இந்த யுத்தம் முடிவடையுமோ எனக்குத் தெரியாது. இந்தியாவுக்கு வரப்போகும் சமாஸ காலம் என்ன செய்யக் காத்துக் கொண்டிருக்கிறதோ அதுவும் எனக்குத் தெரியாது—புதிய உரிமைகளோ அல்லது நூதன அடக்கு முறைகளோ. காலம் போய்க்கொண்டே தான் இருக்கிறது; யாருக்கும் எதற்கும் காத்துக்கொண்டிருக்கவில்லை. இந்தியா தன் வியாபாரத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டியிருக்கிறது; தன் கடற்கரைப் பிரதேசங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. பிரிட்டிஷ் கப்பற்றொழில் பலக் குறைவடைந்து வருகிறது. அது நடு நிலைமை வகிக்கும் நாடுகளின் கப்பற்றொழிலின் உதவியை நாட வேண்டியிருக்கும். அப்படி இருக்க, இந்திய தேசியக் கப்பல் தொழிலின் உதவியை சிநேக பாவத்துடன் ஏற்றுக் கொள்ளுமா?

—ஸ்ரீ வால் சந்த் ஹிரசந்த்

* * *

உலகம் நம் நிலைமையை உணரும் என்று நம்புகிறேன்; நம் தீர்மானத்தின் மேல் குறைகூறுது. இந்த நெருக்கடி சமயத்தில் அவசரப்பட்டு எதையும் செய்துவிடாமல் தடுக்க நாம் வெகு ஜாக்கிரதையாகப் பாடு பட்டோம். சாந்தமாகவும் பொறுமையுடனும் காத்துக் கொண்டிருந்தோம். ஆனால், கணக்கற்ற நாட்கள் காத்துக் கொண்டிருக்க மாட்டோம் என்பது நிச்சயம்.

—மௌலானா அபுல்கலாம் ஆஸாத்

* * *

ராம்கார் செய்திகள் இதை அறிவிக்காவிடினும், காந்திஜீயின் தலைமையில் காங்கிரஸ் தொடங்கப்போகும் இயக்கம் இது வரை நடந்ததைப் போலிராது. காங்கிரஸ் ஒரு புதுமுறையை ஆலோசித்து வருகிறது. அதையே மகாத்மா நடைமுறைக்குக் கொணர்வார்.

—ராய்ஸ் வீக்லி

அதிகப் பிரஸங்கம்

"பூனை நரம்பு ஆராய்ச்சி"

அழகிய சிலை. ஆனால் ஆடையாபரண மேதுமின்றி நிர்வாணமாக நிற்கிறது அச் சிலை. அதைக் கண்டதும் மனத்தில் உண்டாகும் உணர்ச்சி பார்ப்பவர்களின் மனப் போக்கை அனுஸரித்தே இருக்கும். இது போலவே "பூனை நரம்பு"க் காவியங்களும் படிப்பவர்களின் மனநிலைக்குத் தக்கபடிதான் இருக்கும் என்று நான் கூறியது பலித்துவிட்டது. பழய மடிஸஞ்சிப் பண்டிதருக்குக் கோபம் வந்துவிட்டது. "ஹிந்து"ப் பத்திரிகையில் விமர்சனம் எழுதி நான் சொன்னது உண்மை என்று ரூபித்துவிட்டார்.

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்று ஒரு மஹான் கூறினது இம்மாதிரி விமர்சகரைக் குறித்துத்தான்போலிருக்கிறது. இல்லாவிட்டால் "பக்கங்கள் × ம் 20ம்" கொண்ட புஸ்தகத்தைச் சரியாகப் படித்து அர்த்தம் செய்துகொள்ளாமல் விமர்சனம் செய்ய முன் வருவாரா? "indo-Anglian" என்பதைச் சிறிய "i" யுடன் எழுதும் முறை விமர்சகருக்கு விளங்கவில்லையாம். அதிலும் கடைசிவரை அம்முறையைக் கைப்பிடிக்காதது விசித்திரமாக இருக்கிறதாம். என்போன்றவர் சொல்லித்தான், "பண்டித பரம்பரைக்கு" உண்மைத் தத்துவம் விளங்குமென்று அப்பொழுதே நான் சொல்லவில்லையா? பாரத மணி 17-ம் தேதி முத்திலுள்ள என் அதிகப் பிரஸங்கத்தைப் படித்தாரானால் எல்லாம் விளங்கிவிடும்.

இரும்பு அளக்கும் படிக்கல்லால் தங்கத்தை நிறுத்து, ஒரு படிக்கல் நிறைகூட இல்லையே என்று, இரும்புக்கும் தங்கத்துக்கும் உள்ள வித்யாஸம் தெரியாமல், சொல்பவனைப் பின்பற்றி, காதல் காவியங்களையும், மனச் சித்திரங்களாகிய கற்பனைக் காவியங்களையும் (Romantic Poetry) விமர்சனம் செய்யும் முறையை, நையாண்டி காவியங்களை (Satiric Poetry) விமர்சனம் செய்வதில் கையாண்டு) "இது கவிகளுக்குரிய தொழில் என்றால், என் ஆக்ஷேபனை, மனக்கொதிப்புடன் மறுப்பாக மாறுகிறது" என்கிறார் விமர்சகர். காவியங்களின் வகுப்புப்பேதங்கள்கூடத் தெரியாமல் விமர்சனம் எழுத முன்வந்த இவரைக் குறை கூறுவதா அல்லது.........?

"போலீஸ் கச்சேரிகளில், உண்மை என்ற வார்த்தைக்குரிய அர்த்தத்துடன் உண்மையைக் கூறுவதா கவியின் வேலை? இல்லைவே இல்லை" என்கிறார் விமர்சகர். ஆனால் அடுத்தாற்போல், "கவிகளின் மூலநிதி பொன்மூலாம் பூசிய பொய்கள் அல்ல.... கவிகளுக்கு வெளித் தோற்றமெல்லாம் உமிபோன்றவை. மறைந்திருக்கும் அழகாகிய உண்மையை வெளிப்படுத்துவதுதான் அவர் வேலை," என்கிறார். இக்கருத்தை மனதில் வைத்துக்கொண்டு காவியம் எழுதுவது கவியின் தொழில் என்றால், இதே கருத்தை மனத்தில் வைத்துக்கொண்டு விமர்சனம் செய்வது விமர்சகர்களின் கடமை அல்லவா?

ஆனால் நம் விமர்சகர் "பூனை நரம்பு" விஷயத்தில் இக் கருத்தை அடியுடன் மறந்து, வெளித் தோற்றத்தை எடுத்துக் கொண்டு "உண்மையின் உதட்டிலிருந்து ரோஜாவை எடுத்துவிட்டு, அவ்விடத்தில் கொப்புளத்தை நட்டுவிட்டார் ஈச்வரன்" என்கிறார். "Romantic Poetry"யில் "பஞ்சையும் மிஞ்சிய மெல்லிதழ் தெய்வ மலர்" என்று புகழப்படும் பூலோக ரோஜா மலர், நையாண்டிக் காவியங்களில் "குத்திப் புண்படுத்தும் கொடுமுள் படைத்த காட்டு ரோஜா"வாக மாறும் என்பதை விமர்சகர் மறந்துவிட்டார்.

உண்மையை எடுத்துரைக்கும் "அபூர்வ முறைதான்" நையாண்டிக் காவியத்தின் உயிர். உலகத்தின் குற்றம் குறைகளை

யும், மனித சுபாவத்தின் மாசு மறுக்களையும் பொறுக்கி எடுத்துத் திடுக்கிடும் விதமாய்க் கூறுவதே நையாண்டிக் காவியத்தின் தத்துவம். ஆனால், ரஸிகர்களின் மன நிலையைக் கலைக்காமல், இவ்விதம் செய்யக் கவியால் முடியாது. முழு உண்மையே, நையாண்டிக் காவியத்தில், நிஜ உண்மை. அதை மிகைபடுத்தி, நகை மொழியாகவோ, நிந்தனை மொழியாகவோ கூறுவதுதான் நையாண்டிக் கவியின் தொழில். இதைத்தான் "பூனை நரம்புகளில்" காண்கிறோம்.

புதுமைப் பெண் (New Woman), நிரந்தர பிரும்மச்சாரி (Compleat Bachelor-இதில் complete என்பதற்குப் பதிலாக compleat என்று எழுதிய முறை விமர்சகருக்கு விசித்திரமாக இல்லையா) என்ற இவ்விரு பூனை நரம்புகளும், மாதர் மயக்கத்தையும், காம மோஹத்தையும் நிந்திக்கும் நகைமொழிக் காவியங்கள்; ஆங்கில மஹா கவி போப் எழுதிய "அளகச் சுருள் அபஹரணம்" (Rape of the Lock) என்ற காவியத்திற்குச் சமானமானதாக, மேற்கூறிய 'பூனை நரம்புகளை'க் கூறலாம். போப்புக்குள்ள திறமை நம் 'பூனை நரம்புக் கவி' யிட மிருப்பதைக் கொண்டாடுவதற்குப் பதிலாக விமர்சகர் கோபமும் வருத்தமும் அடைந்ததின் காரணம் என்ன? "கவி போப் எழுதியது காவ்யமல்ல, படிக்கவோ அச்சிடவோ தகுந்ததல்ல," என்று விமர்சகர் சொல்வாரானால், "பூனை நரம்புகளும்" காவியமல்ல, கவிக்குரிய வேலை அல்ல என்று ஒப்புக்கொண்டு "இந்த indo-anglian விமர்சகர்களைப் படைக்க உன் கை நடுங்கவில்லையா?" என்று ஈச்வரனை நாம் நொந்துகொள்ள வேண்டியதுதான்.

ஆரம்பத்தில் சூரத்தனமாக ஆரம்பித்துக் கடைசியில் தன்னை மறந்து கவியைப் புகழ ஆரம்பிக்கிறார் விமர்சனத்தில் விமர்சகர். "தாழ்ந்ததும் ஆதவன் அந்தி ஒளியும், வீழ்ந்தது வலைஞன் கைப்பாச வலைபோல்" ஆதியில் (In the Begining) என்ற இடத்தில் "காவிய ஜீவஜ்ஜோதி" இருக்கிறதாம். ஆனால், "எனில் மாலையிலோ-(வீணுற்றதன்னால் என் வாழ்வாதலின்)-தன்னுடல் வெடித்துப் பத விழுந்த வழுநீரால், வானுலகப் புண்ணீர்த் தூய்மை சீர் குலைக்கத் தோன்றினைக் கோரமாய்த் தக்காளிப் பழம்போல்" என்று ஸூர்யனை, நவீன ஸூர்யஸ்தோமத்தில் வர்ணித்தது, விமர்சகருக்குக் குறையாகத் தோன்றுகிறது. "உண்மைப் பேய் பிடித்தாட்ட, ஈச்வரன் கண் கண்டதெல்லாம் பட்டொழிந்தன" என்கிறார். கடைசியாக அச்சிடத் தகாத அளவு மோசமாக இருக்கும் "Doggerel" என்ற "பூனை நரம்பையே" அவர் புகழ்வதென்றால் மற்றவைகளின் உயர்வை நான் எடுத்துக் கூறவேண்டுமா?

கவியைத் தட்டிக் கொடுத்து புத்திமதி கூறுகிறார் விமர்சகத் தாத்தா. அதை அனுசரித்து "பூனை நரம்புக் கவிக்கு" நானும் ஒரு அதிகப் பிரஸங்கம் செய்ய விரும்புகிறேன். "ஆயிரம் indo-anglian, விமர்சகர்கள் உம்மை நிந்திக்கட்டும். உம் காவ்யங்களுக்குத் தப்பர்த்தம் கூறட்டும். அவைகளைக் கவனிக்காதீர். உண்மைக் காவியம் எழுதும் சக்தி அவர்களிடம் இல்லை. உம்மிடம்தான் இருக்கிறது ஆகையால் அடுத்தாற்போல் "புலிப் பாய்ச்சல்" காவியம் எழுதும். ஆனால், உம் கண்டனத்திற்கோ எதிர் வாதத்திற்கோ உரியவர் என்று உம்மால் எண்ணப்பட்டதாக, அவ்வாயிரத்தில் ஒருவர் கூடத் தன்னைப் பெருமைப் படுத்திச் சொல்லிக்கொள்ள இடம் கொடுக்காதீர்.

"அதிகப் பிரஸங்கி"

கிராமப் பொருளாதாரம்

[ஜி. பாலசுப்ரமண்யம், மாயவரம்]

கிராமப் புனருத்தாரணம், கிராம முன்னேற்றம், கிராம சேவை, இம்மாதிரித் தலைப்பின் கீழ் தற்காலம் பத்திரிகைகளில் உலகானுபவமுள்ள பல பிரபல கனவான்களால் அடிக்கடி பிரசாரங்கள் எழுதப்பட்டு வருவதை அனேகமாய் எல்லாரும் கவனித்திருப்பார்கள். இந்த விஷயங்களைக் குறித்து வெகு விடங்களில் பொதுக் கூட்டங்களிலும் பிரசங்கங்கள் செய்யப்பட்டு வருவதையும் கேட்டிருப்பார்கள். இதற்கு முக்கியமான காரணம், நம்மவர்களில் பெரும்பான்மையோர் சுகமான கிராம வாழ்க்கையை நிராகரித்து, நவீன நாகரீகத்தில் ஈடுபட்டு, பட்டண வாசங்களில் சென்று அவரவர்கள் யோக்யதைக்குத் தகுந்தவாறு உத்தியோகங்களிலோ அல்லது வியாபாரங்களிலோ அமர்ந்து வருவதுதான். நவீன நாகரிகத்தில் ஈடுபட்டார்களென்றால், அவர்கள் தங்களுக்கு அவசியமல்லாத புதிய பழக்கங்களைக் கைக்கொண்டு அதனால் அனாவசியமான செலவுகள் செய்து கடைசியில் தங்கள் வேலையை விட்டு வந்து சுகமாய்க் காலங் கழிக்கத் தங்கள் கையில் போதுமான தொகையைச் சேமிக்க முடியாமல் பலவிதமான கஷ்டங்களுக்கு ஆளாகிறார்கள் என்பது தான். நவீன நாகரிகத்தின் பழக்கங்களை அறவே ஒழிக்கவும் அவர்களால் முடியவில்லை.

இம்மாதிரி கஷ்டப்படும் ஜனங்களின் சங்கியை வரவர அதிகரித்துக் கொண்டு வருகிறது. அப்படி அதிகரிக்கவே அவர்களுக்குக் கிராம வாழ்க்கையின் சௌகரியங்கள் மிகவும் மேலானது என்ற உணர்ச்சி வந்து, அதைப்பற்றி இப்போது தீவிரமாய்ச் சிந்திக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

கிராமத்திலுள்ள முக்கியமான செல்வமானது அங்குள்ள நன்செய், புன்செய் நிலங்கள், கால் நடைகள், அங்குள்ள ஜனங்களின் ஒத்துழைப்பு இவை தான். செல்வம் என்ற பதத்தைக் கேட்ட மாத்திரத்தில் ஜனங்களுக்குப் பொதுவாய் பணம்தான் ஞாபகம் வருகிறது. ஆனால் நிஜமான செல்வமானது ஜனங்களுக்கு இகத்தில் சுகத்தைக் கொடுக்கக் கூடிய ஜீவனோபாயத்திற்கு வேண்டிய இயற்கையாய் விளையும் பொருளேயாகும். பணமானது நமது சௌகரியத்திற்காக நம்மால் ஏற்படுத்தப் பட்ட பண்டமாற்றுதலுக்கு ஆதாரமாயுள்ள ஓர் கருவியேயல்லாது, அது செல்வமாகாது. ஆயினும், நாம் அப்பணத்தைக்கொண்டு ஜீவாதாரத்திற்கு வேண்டிய எப்பொருளையும் சுலபமாய்ப் பெறக் கூடுமாகையால், அதையும் நாம் செல்வமென்றே கருதுகிறோம்.

ஜீவாதாரப் பொருள்கள் இயற்கையாய் விளையக்கூடியவையாயினும், நாம் காலாகாலத்தில் அதற்காக வேண்டிய வேலைகளைச் சரிவரச் செய்யாவிடின், அப்பொருள்கள் விளையமாட்டா. ஆகையால் ஜனங்களின் ஒத்துழைப்பு முதன்மையான செல்வமாகும். கிராமத்தில் வசிக்கும் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே நிலங்கள் இருந்தபோதிலும் அந்த நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சப் பொதுவாக ஒரே கால்வாய்தான் இருக்குமாகையால், கிராம வாசிகள் அனைவரும் ஒன்று கூடி

சரியான காலங்களில் வாய்க்கால் வெட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யாவிடில், நிலங்களில் தண்ணீர் சரியாகப் பாயாமல் விளைச்சல் குறைந்து அதனால் ஜனங்களுக்கு நஷ்டமுண்டாகும்.

கிராமப் பொதுக் காரியங்களுக்காகப் புராதனமாய் ஏற்பட்டிருந்த கிராமப் பஞ்சாயத்துகளின் முக்கியத்வத்தை இப்போது மறுபடியும் ஊர்ஜிதப்படுத்தி வருகிறார்கள். இந்தப் பஞ்சாயத்துகள் இன்னும் அவைகளின் கடமைகளைச் செம்மையாய்ச் செய்ய ஆரம்பிக்கவில்லை. அனுபவத்தில் அவ்வப்போது தெரிகிற குறைகளைத் தான் தீர்க்க முயன்று வருகின்றன.

கூலிக்காரர்கள் மற்றுமுள்ள கிராமவாசிகள் எல்லோரும் அவரவர்கள் யோக்யதைக்குத் தகுந்தவாறு வகுப்பு வாரியாய்ச் சேர்ந்துகொண்டு பணத்தைச் சிறிது சிறிதாய்ச் சேமிக்க கூட்டுச் சீட்டுகள் போட்டு வந்த விஷயம் எல்லோரும் கேட்டிருப்பீர்கள். அனேகமாய் எல்லா கிராமங்களிலும் ஒவ்வொரு அமாவாசை தினத்திலும் இக்கூட்டுச் சீட்டு போடப்பட்டு வந்ததால் இவைகளுக்கு அமாவாசைச் சீட்டு என்றே பெயரிடப்பட்டிருந்தது. இப்போதும் பலவிடங்களில் இம்மாதிரிக் கூட்டுச் சீட்டுகள் அமுலிலிருந்து வருகின்றன.

நமது சர்க்காரும் ஜனங்களின் சௌகரியத்தை யுத்தேசித்து ஐக்கிய நாணயச் சங்கங்கள் எல்லாவிடங்களிலும் ஸ்தாபித்திருக்கிறார்கள். இவ்வைக்கிய நாணயச் சங்கங்கள் முக்கியமாய் ஜனங்களின் சிக்கன முறையை விருத்தி செய்து, சிறுகச் சிறுக பணத்தைச் சேமிக்கவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் இவைகளின் முக்கியமான நோக்கத்தை வெகுவாக ஜனங்கள் உணரவில்லை. இவைகளுக்குச் 'சங்கங்கள்' என்று பெயர் கொடுத்ததற்குக் காரணம் இச்சங்கங்களின் அங்கத்தினர் அனைவரும் ஒன்று சேர்ந்து தங்களுள் ஒவ்வொருவருடைய க்ஷேமத்திற்காகவும் பாடுபடவேண்டியது என்ற நோக்கமேயொழிய, கேவலம் லாபம் சம்பாதிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டதென்பதல்ல. இந்த கொள்கையைச் சரிவர உணர்ந்து ஒவ்வொரு சங்கத்தின் அங்கத்தினரும் வேலை செய்து வந்தார்களேயானால், அவர்கள் மிகவும் க்ஷேமமடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை. கிராமவாசிகள் தங்களுக்கு வெளியூரிலிருந்து வரவேண்டிய தேவைப் பொருள்களை இச்சங்கங்கள் மூலமாய் மொத்தமாய்த் தருவித்து அவரவர்கள் தேவைக்குத் தகுந்தவாறு விநியோகித்துக் கொள்ளலாம். ஒவ்வொருவரும் தனித் தனியே தங்கள் தங்கள் தேவைப் பொருள்களைத் தருவிப்பதைவிட, மேற்கூறியபடி மொத்தமாய் வாங்கி விநியோகித்துக் கொண்டால் வீண் செலவு ஆகாமலிருக்கும். இம்மாதிரி சிக்கன முறையானது ஜனங்களின் ஒற்றுமையினால் சுலபமாய்க் கைக்கொள்ளப்படலாம்.

புராதனமாய் நம் முன்னோர்கள் கிராமங்களில் ஒற்றுமையாகவும் சிக்கனமாகவும் இருந்துவந்ததனால் அவர்கள் சந்தோஷமாயும் திடகாத்திரமாயும் இருந்தார்கள். அப்படிப்பட்ட சுகமான வாழ்க்கையை விட்டுவிட்டுத் தங்கள் பழக்கங்களை முற்றிலும் மாற்றிக்கொண்டு வெகுகாலம் பட்டண வாசங்களில் வசித்து அங்கு படும் கஷ்டங்களைப் பொறுக்க முடியாமல் திரும்பவும் கிராம வாழ்க்கையைக் கைக்கொள்ள எத்தனிப்பதானது, கொஞ்சம் சிரமசாத்யமாகத்தான் இருக்கும்.

ஆனால், பட்டண வாசங்களிலுள்ளது போல் கிராமங்களில் எல்லா சாமான்களையும் காசு கொடுத்து வாங்கவேண்டியதில்லை. வசிக்க யோக்யமான ஓர் வீடும், அதைச் சேர்ந்தாற்போல் ஓர் தோட்டமும், சாப்பாட்டுக்குப் போதுமான அளவு விளையக்கூடிய சொல்ப நிலமும் ஒருவருக்கு இருந்துவிட்டால், சிரமமின்றியில் சுகமாய்க் காலம் கழிக்கலாம். ஆனால் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் அவரவர்கள் சக்திக்குத் தகுந்தவாறு சிற்சில வேலைகள் செய்யத் தயாராகவிருக்கவேண்டும். வீட்டிலுள்ள ஆண்மக்கள் தோட்டத்தைச் செப்பனிட்டுப் பல விருக்ஷங்கள், காய் கறிகள்

முதலியன பயிர் செய்யவேண்டும். நிலங்களுக்கு வேண்டிய மராமத்து வேலைகளைக் காலாகாலத்திலே செய்து பயிரைச் செவ்வனே பாதுகாத்து அறுப்பு காலங்களில் நேரில் இருந்து கண்டு முதல் செய்து, விளைந்த நெல்லை வீட்டிற்குக் கொண்டுவரவேண்டும். கிராமத்தில் விளையும் பயிரைப் பார்ப்பதற்கே நேரமல் நிலங்களைப் பிறர் பார்வைக்கு விட்டுவிட்டு நிலச் சுவான்தாரர்கள் பட்டண வாசங்களிலிருந்துகொண்டு நெல் வரப்போகிறது என்று சாதக பக்ஷிகள் போல் நெல்லை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சமயத்தில், நிலங்கள் நன்ருய் விளையவில்லை என்றும், கண்டு முதல் செய்த நெல்லானது வாய்தாப் பணத்திற்குக் கூடக் கட்டாது என்றும் மேல்கொண்டு வாய்தா செலுத்தப் பணம் இவ்வளவு தேவை என்றும், சொல்லித் தங்களுக்குக் கிடைக்கும் கடிதங்களை வைத்துக் கொண்டு திரும்பத் திரும்ப அக்கடிதத்தையே வாசித்துப் பார்க்கும் பேதைகளை நாம் பார்த்திருக்கிறோம். "தன்னுயுதமும் தன் கைப்பொருளும் பிறர் கையில் கொடுக்கும் பேதையும் பதரே" என்ற பழமொழி மேற்சொன்னவர்களைக் குறிப்பிட்டே ஏற்பட்டதுபோலும். இம்மாதிரியல்லாமல் நிலக்காரர்களே எல்லாவற்றையும் நேரில் கவனித்தால் அவர்களுக்குக் குறையிராது. வீட்டிலுள்ள பெண்மக்கள் வீட்டுக் காரியம் செய்த நேரம் போக, பாக்கி வேளையில் கைராட்டினம் வைத்துக்கொண்டு கதர் நூற்க வேண்டும். நமது முன்னேர்கள் ஒவ்வொருவரும் கை ராட்டினம் வைத்துக் கதர் நூற்றுக் கொண்டிருந்தார்கள். இப்பவும் நமது ஸ்திரீகளுள் ஏதாவது பேச்சு வந்தால் "உன் தாயார் கொட்டை நூற்றுச் சேர்த்த காசோ" என்று சொல்லக் கேட்டிருப்பீர்கள். இதிலிருந்து நமது ஸ்திரீகள் ஒவ்வொருவரும் முன்னளில் கதர் நூற்றுக் கொண்டிருந்தார்களென்று விளங்குகிறது. இப் பழக்கத்தை இப்போது அமுலுக்குக் கொண்டுவந்தால் மகாத்மா காந்தி சொல்லுகிறபடி நமது தேசம் முன்னேற்ற மடையுமென்பது நிச்சயம். கதர் நூற்பதானது ஆண் மக்களைவிடப் பெண்மக்கள் மிகவும் திறமையுடன் செய்யக் கூடுமென்பதே என் தாழ்மையான நம்பிக்கை. கதர் நூற்பதற்குப் பொறுமையும் ஊக்கமும் முக்கியமாய் வேண்டும். பொறுமையுடன் அதிக நேரம் ஒரே மாதிரியான வேலையைப் பெண்மணிகள் அலுப்பின்றிச் செய்வது போல் ஆண் மக்கள் செய்கிறதில்லை. உதாரணமாக பூத் தொடுத்தல், மணி கோர்த்தல், அப்பளம் இடுதல் இம்மாதிரியான வேலைகள் நமது பெண்மணிகள் வெகு ஊக்கத்துடன் அலுப்பின்றிச் செய்வதை நாம் பார்த்திருக்கிறோம். இவ்விதமான ஊக்கமும், பொறுமையும் அவர்களுக்குக் கைராட்டினத்தில் இருந்தால் அவரவர்கள் வஸ்திரங்களுக்குப் போதுமான நூலை அவர்களே தயாரித்து விடலாம்.

குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் மேற்கூறியவாறு அவரவர்கள் வேலையைச் செய்து வந்தார்களேயானல், தங்கள் கால க்ஷேபத்திற்கு வேண்டிய சாமான்களிலே பலவற்றைத் தாங்களே தயாரித்துக் கொள்ளலாம். வெளியூரிலிருந்து வாங்கும்படி யிருக்கும் சாமான்கள் சிலவே தான் இருக்கும். அதாவது உப்பு, நவதானியத்தில் சில, முக்கியமாய்க் காப்பிக் கொட்டை—இவைகளைத்தான் வெளியூரிலிருந்து வாங்க வேண்டும். இந்த சாமான்களும் கிராமத்தார்கள் ஒற்றுமையாயிருந்து ஏற்கனவே சொல்லியபடி மொத்தமாகத் தருவித்து வீதித்துக் கொண்டால், அதிக செலவில்லாம லிருக்கும்.

கிராமப் பொதுக் காரியங்கள் கிராமவாசிகளின் ஒற்றுமையால் பிறர் தயவன்றியில் பஞ்சாயத்து மூலம் நடத்திக் கொள்ளலாம். குழந்தைகள் படிப்பதற்குப் பள்ளிக்கூடங்கள், தேக சிகிச்சைக்கு ஆஸ்பத்திரி, கிராம சுகாதாரத்திற்காக வேண்டிய காரியங்கள் இவைகளைச் செவ்வனே நடத்திக் கொள்ளலாம். ஒவ்வொருவரும் தங்களுக்கு விளையும் நெல்லில் கலத்திற்கு இவ்வளவு படி என்று மேற்கண்ட பொதுக் காரியங்களுக்காகத் தனித்

தனியே கொடுத்துவிட வேண்டும். கூலி வேலை செய்பவர்கள் ஒவ்வொருவரும் ஒரு நாள் கூலியை ஒவ்வொரு மாதமும் கொடுக்கவேண்டும். இம்மாதிரி சேகரிக்கும் பொருளைக்கொண்டு மேற்கூறிய பொதுக் காரியங்களை நடத்திக் கொள்ளலாம்.

கோவிலில் நடக்கவேண்டிய உற்சவங்களைக் கிராமத்தார்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து செம்மையாகவும் சிக்கனமாகவும் நடத்தக்கூடும். அவர்களுள் ஒருவர் வீட்டில் ஏதாவது கலியாணம் அல்லது விசேஷம் நடக்கவேண்டுமானால் எல்லோரும் தேகப் பிரயாசையால் செய்யக்கூடிய காரியங்களை அவருக்குச் செய்து அனாவசியமான செலவைக் குறைக்கும்படி செய்யலாம். கலியாணத்திற்காக அவ்வீட்டுக்காரர் ட்ரேட் மார்க்குள்ள அப்பளத்திற்கு ஆர்டர் செய்யத் தேவையிராது.

கிராம ஒற்றுமை, கிராம சேவையின் உணர்ச்சி இவ்விரண்டு மிருந்தால் கிராமம் சுலபமாய் முன்னேற்றமடையும். ஆனால் பட்டண வாசத்திலுள்ள வீண் ஆடம்பரங்களுக்கு ஆசைப்படுபவர்கள் கிராம வாசத்திற்குத் தகுதியற்றவர்கள். விவேகம், பொதுக்கடமை யுணர்ச்சி, தன் மட்டில் திருப்தி, இந்த குணங்கள் ஜனங்களிடமிருந்தால், தேச முன்னேற்றத்திற்கு அஸ்திவாரமாயுள்ள கிராம முன்னேற்றத்தைச் செய்துவிடலாம்.

—



ஸ்டார் வாஷிங் ஸோப்

நம் நாட்டில் தயாரிக்கப்பட்டு தூய்மையாய் வெளுப்பதில் நிகரற்ற 'ஸ்டார் வாஷிங் ஸோப்பை' வாங்கி உபயோகித்து நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்.

வியாபாரிகளுக்கும் மொத்தமாய் வாங்குவோருக்கும் தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

STAR SOAP WORKS
Sembanar Koil, S. I. Ry.,
(Tanjore Dt.)

அன்றைய வியாபாரம்

[வே. ரா. சுந்தரராமன், எம். ஏ., கல்கத்தா]

காலையில் காப்பி சாப்பிட்டுவிட்டு வெளியில் போகையில் சாம்பு சீக்கிரமாகத்தான் வீடு திரும்புவதாகத் தீர்மானித்திருந்தான். போனவிடத்தில் தடங்கல் ஏற்பட்டுவிட்டது. மணி பதினொன்று கழிந்தும் அவனுடைய சகாக்கள் அவனை விட்டபாடில்லை. ஓரிருமுறை வீடு திரும்புவதற்கு முயன்றான். அவர்கள் ஒரேயடியாக வழிமறித்தனர். "வாரத்திற்கு ஒருநாள் லீவு கிடைக்கிறதென்றால் அன்றுகூட என்னடா இழவு அவசரம்" என்று, அங்கேயே தங்கிவிட்டான். வீடு திரும்புகையில் சரியாக மணி பன்னிரெண்டு.

வந்ததும் வராததும் வெந்நீர் அறைக்குட்சென்று அவசர அவசரமாகக் குளிக்க வாரம்பித்தான். ஸ்நானம் பாதி ஆகுமுன்னர் வாசலில் "அம்மா" என்று ஒரு குரல் எழுந்தது. ஏற்கனவேயே அவனுக்குப் பசி அதிகரித்திருந்தது. அத்துடன் பொங்கிக்கொண்டிருந்த வெந்நீரை விளாவப் போதிய குளிர்ந்த நீர் சேகரித்து வைக்கவில்லையென்று வீட்டில் எல்லோர் பேரிலும் எரிந்து விழுந்துகொண்டிருந்தான். குழாயிலோ, சென்னைப்பட்டணத்தில்தான் எவ்வளவு வேகமாய் ஜலம் வருமென்பதைச் சொல்ல வேண்டியதில்லையே. இத்தனை இடைஞ்சல்களுக்கிடையில் வாசலில் ஓர் பிச்சைக்காரனும் வந்து கூவினால் எப்படியிருக்கும்? ஏனெனில், வாசலில் எழுந்த குரல் ஓர் பிச்சைக்காரனுடையதாய்த்தானிருக்க வேண்டுமென்று அவன் தீர்மானித்துவிட்டான்.

ஸ்நானத்தை அரைகுறையாய் முடித்துக்கொண்டு வாசற்பக்கமாய் ஈர வேஷ்டியுடன் ஓடினான் சாம்பு. வீட்டின் குறட்டில் ஏழு வயதுள்ள ஓர் பையன் கையில் ஓர் தகரப் பெட்டியுடன் நின்றுகொண்டிருப்பதைக் கண்டான். பசி வெறியில் சுறீலென்று பையனை ஓங்கி அறைந்துவிட்டு,

"ஓடு வெளியே, பிச்சைக்காரக் கழுதை", என்று சொல்லிக்கொண்டே வீட்டிற்குள் போய்விட்டான்.

பாதி யழுகையுடன், "நான் பிச்சை கேட்க வரவில்லை சாமி, என்னிடம் கொஞ்சம் பிஸ்கோத்துகள் இருக்கின்றன. அவைகளை விற்பதற்காகத்தான் வந்தேன்," என்று பையன் சொன்னது சாம்புவின் காதிற் கெட்டவில்லை. பையன் அவ்வீட்டை விட்டு அகன்றான்.

2

பையன் பெயர் பழனி. அவனுக்கு எட்டு வயதிருக்கும். அவன் தகப்பன் கந்தன் என்பவன் அவனுக்கு ஐந்து வயதாகும்பொழுதே அவனையும் அவன் தாயையும் அநாதைகளாய் விட்டுவிட்டு நமன் வாய்ப்பட்டான். கந்தன் போலீஸ் இலாகாவில் "எட்" வேலை பார்த்து வந்தவன். குற்றவாளிகளைப் பிடிப்பதில் அவன் "புலி"யெனப் பெயரெடுத்து அவ் விலாகாவிலுள்ள பல அதிகாரிகளின் நன்மதிப்புக்குப் பாத்திரமா யிருந்தான். ஊரில் "காலரா"வென்னும் கொள்ளை நோய் தோன்றி அதில் மடிந்த பலருள் ஒருவனானன் கந்தன்.

கந்தனிடம் ஒரே ஒரு கெட்ட குணந்தான் உண்டு. அதுதான் கள் குடித்தல். தன் வருவாயெல்லாம் மதுவரக்கனின் பாத காணிக்கையாகச் செலுத்தி வந்தவனையால், வீட்டில் சதா பூசலும் அழுகை சப்தமுமே.

கந்தனின் மனைவி மங்கை யென்பவள் ஒரு பதிவிரதா சிரோமணி. குடி வெறியில் எவ்வளவு மனவெறுப்புத் தோன்றும்படி தன் கணவன் நடந்து

கொண்ட போதிலும், சற்றும் முகங் கோணாமல் அவனிட்ட கட்டளைகளை அவள் நிறைவேற்றி வந்தாள். வாழ்க்கையில் அவளுடைய லக்ஷியமெல்லாம் அவளுடைய குழந்தை பழநியே. அவனை எப்படியாவது கஷ்டப்பட்டு முன்னுக்குக் கொண்டுவந்து விட்டால் தக்க வயதுவந்தவுடன் அவன் தன்னை ஆதரிப்பான், அப்பொழுது சிறிது மன நிம்மதி தனக்கு ஏற்படலாமென்று பூர்ணமாய் நம்பியிருந்தாள். வெண்ணெய் புறப்படுகையில் தாழி உடைந்தாற்போல் பையனைப் பள்ளியில் வைக்கும் சமயம் கிட்டும் பொழுதே தன் கணவன் தன்னைத் தவிக்கவிட்டு விட்டு மீளாப் பிரிவடைந்ததைக் குறித்து மனங் கசிந்தாள். தன் குறைகளை ஏனையோரிடம் வாய்விட்டுக் கூற நாணித் தனக்குள்ளேயே சிணுங்கிச் சிணுங்கி அழுது புழுங்குவாள். நாளடைவில் எல்லாம் ஈசன் செயல் என்று தன்னை ஒருவாறு தேற்றிக்கொண்டு தன் வாழ்க்கையை நடத்த வாரம்பித்தாள்.

இம்மாதிரியான சந்தர்ப்பத்தில் அருகாமையிலுள்ளோர்களுள் சிலர் ஒழுங்கற்ற வாழ்க்கையைக் கைப்பற்றியதை மங்கை கண்டிருந்தாள். ஏன், அவர்களில் சிலர் சுகபோகங்களுடனும் வாழ்ந்து வந்தனர். ஆனால், இவ் வாழ்க்கை அவளுக்கு முற்றிலும் வெறுப்பையே அளித்தது. ஒழுங்கை யிழந்து வயிறு வளர்ப்பதைக் காட்டிலும், அவ்வுயிரை மாய்த்துக் கொள்வதே மேல் என்னும் முடிவிற்கு வந்தாள்.

அந்நியர் வீட்டை அண்டிக் குற்றேவல் செய்து சம்பாதிப்பதையும் வெறுத்தாள். தன்னுடைய புருஷனுக்கு ஆப்த நண்பனான பெருமாள் என்பவன் ஓர் மளிகைக் கடை வைத்திருந்தான். அவனிடத்திலிருந்து முன்பணம் கொடுக்காமல் கடனாக கோதுமை மாவு, சர்க்கரை, நெய் முதலிய சரக்குகளை வாங்கிக்கொள்ளுவதென்றும், அவைகளிலிருந்து பிஸ்கோத்துகள் செய்து அவைகளைத் தன் மகன் பழநியைக்கொண்டு விற்றுவரச் சொல்லி, கிடைத்த வரும்படியில் பெருமாள் கடைக்குக் கொடுத்தது போக மீதியிருந்ததைக் கொண்டு கௌரவமாகக் காலத்தைக் கழிப்பதென்றும் தீர்மானித்தாள். பெருமாளும் இந்த ஏற்பாட்டிற்கு இணங்கவே, ஓர் பிஸ்கோத்து வியாபாரியாக அவளுடைய புதிய வாழ்க்கையைத் தொடங்கினாள்.

பழநி, தன் தாயார் செய்த பிஸ்கோத்துகளை ஒரு தகரப் பெட்டியிலிட்டு அதைத் தலைமேற் சுமந்து, தெருத்தெருவாயலைந்து விற்று, கிடைத்ததைத் தன் தாயிடம் கொணர்ந்து சேர்ப்பான். அதிகாலையில் பெட்டியுங் கையுமாக வெளியே போகும் அவன் வீடு திரும்பிய பிறகுதான் அன்று சமையலுக்கு வேண்டிய ஏற்பாடுகள் தொடங்கப்படும். காலையில் அவனை வழியனுப்பிவிட்டபின் தன் வீட்டுவேலைகளுக் கிடையிடையே இன்றைய வியாபாரம் நன்றாய் முடிய வேண்டுமே என்று ஈசனைப் பிரார்த்தித்த வண்ணம் வாசலில் அவன் வருகையை எதிர்நோக்குவாள் மங்கை. அநேக நாட்கள் கொண்டுபோன பிஸ்கோத்துகள் விலை போகாமல் அப்படியே திரும்பி வரும். அப்பொழுதெல்லாம் வீட்டில் பூராப் பட்டினிதான்.

3

வியாபாரத்திற்காக வெளியிற் சென்ற பையனுடைய கதியோ மிகவும் பரிதாபகரமாயிருந்தது. போனவிடங்கள் பலவற்றில் அவனுடைய முயற்சிக்குக் கிடைக்கும் பலன் வெறும் ஏமாற்றந்தான். சிலவிடங்களில் அவன் அவமானமும் அடைவான். கண்டோர் கண்டதைப் பேசுவதையும் அவன் கேட்கவேண்டியிருந்தது. முதலில் ரோஷம் அதிகரித்திருந்த அப்பையனுக்கு, இது பொறுக்க முடியாமல்தான் இருந்தது. ஆனால் நாளடைவில் அவ்வேச்சுகள் அவனுக்குச் சர்வ சகஜமாய்விட்டன. சில சமயங்களில் அவனுக்குக் கிடைத்த பூசையையும் அவன் பொறுமையுடனும் மௌனத்துடனும் ஏற்றுக்கொள்ளவேண்டியிருந்தது.

இவைகளுள் கடைசியாகக் கூறியது தான் ஆரம்பத்தில் குறித்த தினத்தன்று

சாம்புவினிடத்திலிருந்து அவனுக்குக் கிடைத்தது.

உதை பலமாய் விழுந்து விட்டதால், பையனுடைய அழுகையும் சற்று நீடித்தே இருந்தது. கடைசியாக அவன் அழுகையை ஒருவாறு அடக்கிக்கொண்டு அவ் வீட்டை விட்டு வெளியேறினன்.

4

அவ்வீட்டிலிருந்து ரஸ்தாவை நோக்கி நடக்கையில் பழநிக்குத் தன் சுயநினைவே இல்லையென்று சொல்லிவிடலாம். அம் மனப்பான்மையில் அன்று தன் கால்கள் சென்றவிடமெல்லாம் அவன் சென்றிருப்பான். அவன், தன்னுடைய எளிய நிலைமையையும், அன்று தான் வெறுங் கையுடன் வீடு திரும்பினல் தன் தாயாரின் கதி என்னவாகுமென்பதையுங் குறித்து எண்ணியெண்ணிப் புழுங்கினன்.

அருகில் சில சிறுவர்களின் கூட்டம் ஒன்றை நோக்கி அதை யணுகினன். ஏறக்குறைய தன் வயதையேயொத்த சில பையன்கள் கோலி யாடுவதைக் கண்டான். அவனுடைய குழந்தை யுள்ளம் அவனையும் அவ்விளையாட்டிற் கலந்துகொள்ளத் தூண்டிற்று. உடனே தன் கவலைகளை முற்றிலும் மறந்துவிட்டு, தன் பெட்டியை அருகில் ஒரு மரத்தடியில் பத்திரமாய் வைத்துவிட்டு, அச் சிறுவர்களுடன் சேர்ந்து தானும் கோலியை குழியை நோக்கி உருட்ட வாரம்பித்தான்.

இம்மாதிரி அவன் விளையாட்டில் ஈடுபட்டு சுமார் பத்து நிமிஷங்கள்தானிருக்கும். ஏதோ காரணம்பற்றி மரத்தடியை நோக்கித் திரும்பியவன் திடீரென்று "கோ" வென்று கதற வாரம்பித்தான். தான் பத்திரமாயிருப்பதாய் நினைத்திருந்த பெட்டி திறக்கப்பட்டு, அதிலிருந்த அவ்வளவு பிஸ்கோத்துகளையும் சில குழந்தைகள் தின்றுகொண்டிருந்ததைக் கண்டதும் அடிவயிறு கலங்கி மேற்கூறிய கூக்குரல் எழுந்தது. அரை கொடியில் கோலியாடிய சிறுவர்கள் மட்டுமன்றி, இன்னும் வீதியில் சென்றுகொண்டிருந்த பலரும் பழனியைச் சூழ்ந்துகொண்டனர். கேட்கிறவர்களுக்கு விஷயம் ஒன்றையும் விளங்க வைக்காமல் திரும்பத் திரும்ப,

"ஐயோ, இன்று அம்மாளிடம் என்ன சொல்லுவேன்? "இன்று எங்கள் கதி என்னவாகும்"? இவைபோன்றவற்றைச் சொல்லியவண்ணம் அலறிக்கொண்டிருந்தான்.

5

இந்த கலவரத்தைக் கேட்டு வீட்டினுள்ளிருந்து வேடிக்கை பார்க்க வெளியே ஓடி வந்தவர்களுள் நாம் முன்பு குறித்த சாம்புவும் ஒருவன். ஆனல் கூட்டத்தை யணுகியதும் அவனுக்கு அளித்த காட்சி அவன் வயிற்றைக் கலக்கியது. தன்னுடைய குழந்தைகள் நான்கு பேர்களும் அவர்களுடைய அண்டை வீட்டுத் தோழர்களுமாகச் சேர்ந்து பழநியின் பிஸ்கோத்துகளைக் கொண்டு ஒரு சிறு விருந்து நடத்துவதைக் கண்டான். அருகில் அழுதுகொண்டிருக்கும் சிறுவனும் சற்று முன்பு தன்னல் அடித்துத் துரத்தப்பட்டவனுய் இருப்பதையும் தெரிந்துகொண்டான். ஆனல் தன் மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டி சற்று சாவதானமாகவே அருகிலுள்ளோரை விசாரித்து, வியாபாரத்திற்கென்று கொண்டுவந்த தின்பண்டத்தை விளையாட்டு மும்மரத்தில் இழந்ததற்காகப் பையன் அழுகிறுன் என்பதை கூட்டத்திற்குத் தெரிவித்தான். சிறுவனைக் கூட்டத்திலிருந்து சற்று அப்புறம் அழைத்து அவனிடம் ஒரு ரூபாயைக் கொடுத்து,

"அழாதேயப்பா! இதைக் கொண்டு போய் உன் தாயாரிடம் கொடு," என்று சொல்லி அவனைத் தேற்றி யனுப்பினன்.

பழநி அதுவரையில் ஒரு முழு ரூபாயைத் தன் கையினல் தொட்டதேயில்லை. அன்று காலை தனக்கு நேர்ந்த துன்பங்களை மறந்தவனுய் என்றுமில்லாத ஒரு குதூகலத்துடன் பெட்டியை யெடுத்துக் கொண்டு தன் வீட்டை நோக்கி ஓடினன்.

தாய் நாடு

[எஸ். சங்கரன், திருவல்லிக்கேணி]

அவனுக்குத் தெரியும்; நியூயார்க் பட்டணம் தன் தாய்நாடல்லவென்று. அதை சைன டவுன் என்றழைத்தனர் ஜனங்கள். ஆனால் அது அவன் சொந்தத் தாயின் மடியல்லவென்று அவன் ஹ்ருதயம் இடைவிடாமல் கூறி வந்தது. சல சலவென்று ஸதா சப்தம் நிறைந்த தெருக்கள், காலச் சக்கரத்தின் பிடியிலகப்படாமல் தப்பித்துவந்த ஆதி சைனவின் பெருமைகளை உலகுக்குப் பரப்பும் வஸ்துக்கள் நிறைந்த கடைகள், தன்னைவிட அதிக மஞ்சளான நிறமும் இடுங்கிய கண்களுமுள்ள ஜனங்கள், இவ்வளவையும் காலையிலிருந்து மாலைவரை இமைகொட்டாமல் பார்த்து வந்திருக்கிறான். ஆயினும் அவன் மனம் சொல்லிற்று, 'இது உன் தாய்நாடல்ல' என்று. இக் காட்சிகளெல்லாம் அவனுக்குப் புதிதல்ல. தாயின் கர்ப்பத்திலிருந்து இந் நரகஉலகத்தைஎட்டிப் பார்த்ததிலிருந்து அவன் இந்த இடத்தை வெறுத்து வந்தான். தாயின் மடியும், மூலிகைகள் நிறைந்த ஒரு இருட்டறையும்தான் அவன் தன் தேசமென்று நினைத்திருந்தான். தன் தேசம் இதல்லவென்று பள்ளிக்கூடத்திற்குச் சென்றபிறகு தான் அவனுக்குத் தெரிந்தது.

ஒருநாள் டீ சாப்பிட்டுக்கொண்டிருக்கும்பொழுது தகப்பனுருக்கும் தாயாருக்கும் மகன் படிப்பு விஷயம் ஞாபகத்திற்கு வந்தது. கோட்டும் நிஜாரும் அணிந்துகொண்டு இளங் காளைபோல் துள்ளித் திரிந்து வெளி உலக இன்பங்களைச் சுவைக்கலாம் என்ற ஆசையினால் சாங் அதைப்பற்றி அவ்வளவாகக் கவலைப்படவில்லை.

ஒரு நாள் காலையில் அவன் தாயார் அவனைக் குளிப்பாட்டி, உடைகள் அணிவித்து, தன் தாய்ப்பாஷையில் (அமெரிக்காவுக்கு வந்து எட்டு வருஷங்களாகியும் அவளுக்கு அந்த சனியன் பிடித்த இங்கிலீஷ் வரவில்லை. அதைப்பற்றி அவளும் அவ்வளவாக கவலைப்படவில்லை.) பின்வருமாறு கூறினாள்: "அடே சாங்! மற்ற அசட்டுப் பையன்களைப்போல் நீயும் நடந்துகொள்ளாதே. உபாத்தியாயர் சொல்வதைக் கவனித்துக் கேள். அவரிடத்தில் மரியாதையாக நடந்துகொள். ஞாபகமிருக்கட்டும்! இந்த முரட்டு வெள்ளையர் கூட்டத்தில் நீ உதிக்கவில்லை. புராதன 'ஹான்' வம்சத்தின் பெருந்தன்மையான ரத்தம் உன் தேகத்தில் ஓடுகிறதென்பது நினைவிருக்கட்டும்."

சாங், பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டான். முதன்முதலில் உபாத்தியாயர் பையன்களை இருவர் இருவராகச் சேர்ந்து மைதானத்திற்குப் போகும்படி கட்டளையிட்டார். ஆனால் அந்த வரிசையில் சாங் மட்டும் தனியாகப் போய்க்கொண்டிருந்தான். இதைக் கவனித்த உபாத்தியாயர் தடித்த ஒரு வெள்ளைக்காரச் சிறுமியை பார்த்து "மேரி! நீ சாங்வுடன் சேர்ந்து போ!" என்றார். ஆனால் அந்தப் பெண் கர்வமாக தலையை அசைத்து "முடியாது ஸார்! ஒரு சைனக்காரனுடன் ஸரிஸமானமாக என்னால் போகமுடியாது ஸார்!" என்றாள். உபாத்தியாயர் மேரியைச் சிறிது நேரம் கூர்ந்து கவனித்துவிட்டு, சாங் வுடன் தான் சென்றார். எங்கும் ஒரே நிசப்தம் குடிகொண்டிருந்தது. தன்னை மற்ற பையன்கள் அப்படி நோக்குவது தன்மேலுள்ள பச்சாத்தாபத்தினாலல்லவென்பதை சாங் கண்டுகொண்டான். ஆனால் அவன் பிற்கால வாழ்க்கைக்கு அச் சிறு சம்பவம் மிகுந்த உதவி செய்தது. சாங் அதுமுதல் இம்மாதிரியான அவமதிப்புகளுக்குத் தன்னைப் பழக்கப்படுத்திக் கொண்டான். தன் கவன முழுவதையும் படிப்பிலும் முதற் பரிசு பெறுவதிலும் செலுத்தினான்.

சீங்வுடைய பெற்றோர்கள், அவனைப் பற்றிப் பிரமாதமாகப் பேசிக்கொண்டிருந்தனர். தகப்பனாரின் பழைய ஸாமான் கடையை, பிள்ளை ஏற்றுக்கொண்டு சிறப்பாக நடத்துவான் எனப் பொதுமக்கள் நினைத்தனர். ஆனால் தன் பாடங்கள் முடிந்த பிறகு தகப்பனார் கணக்குப் புஸ்தகத்தை புரட்டும்பொழுது அந்த கடைக்கும் அவனுக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாதென்று அவனுக்குத் தோன்றிற்று. அவன் தாய்நாடு இதல்ல. அவன் ஹ்ருதய அந்தரங்கத்தில் அதைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற ஒரு ஆவல் ஸதா எழுந்துக்கொண்டே யிருந்தது. கடையிலிருந்த பவழங்கள், ஆதி சைனாவின் புகழை விளக்கும் புத்த விக்ரகங்கள், சிலைகள், சித்திரங்கள், இவைகளைப் பார்க்கும்பொழுது அவன் மனது விரியும். ஆம்! தாய் நாட்டின் சௌந்தர்ய சூரியனின் சில கிரணங்கள் தானிவைகள். பரிபூரண அழகை அவன் அள்ளிப் பருகலாம்—தாய்நாட்டில்!

நாள்தோறும் ஒரு உபாத்தியாயர் சாங்வுக்குச் சைனாவின் பழைய பாடல்களையும் நீண்டு வளைந்த எழுத்துக்களையும் சொல்லிக்கொடுத்து வந்தார். ஆனால் பக்கத்து வீட்டில் வஸித்து வந்த மாலிலீக்கு இதெல்லாம் பைத்தியக்காரத்தனமாக விருந்தது. மாலி, நவநாகரீக சுழலில் சிக்கிய ஒரு சீனத் துரும்பு. அவளுக்கு அந்த நெடுங் கோடுகளின் ஆழ்ந்த அர்த்தம் விளங்கவில்லை. சாங்வின் தாயார் அவளை நோக்கி "அடி லீ! உனக்கு உன் ஸ்வதேசத்திற்குப் போக இஷ்டமில்லையா" என்று, ஒருதரம் கேட்டாள். மாலி தன் உதடுகளுக்குச் சாயம் பூசிக்கொண்டே "சைனாவுக்கா! நானா! ஏ-ஏ, அங்கே மின்சார விளக்குகள்கூட கிடையாதாமே! இன்னும் பெண்களை யெல்லாம் வீட்டில் வைத்துப் பூட்டி யிருப்பார்களாமே!" என்றாள்.

சாங் காலேஜிலிருந்து வரும்பொழுதும் போகும்பொழுதும் அவள் வீட்டருகே சிறிது நின்றுவிட்டுப் போவான். 'காலேஜை அந்த வருடத்துடன் முடித்துக்கொண்டு நேராய் தாய் நாட்டிற்கு போகப் போகிறான்!—தாய் நாடு!... ஹா அந்த திவ்விய நாமத்தை உச்சரிக்கும்பொழுது வார்த்தைகள் ஹ்ருதயத்தின் எத்தகைய ஆழத்தினின்று வெளிப்படுகின்றன. பெருமூச்சுடன் சலசலவென்று இறைச்சலிட்டுக் கொண்டிருக்கும் நவீனத் தெருக்களை நோக்கினான். தாய் நாட்டின் நிம்மதியான தெருக்களும், பெருந்தன்மை வாய்ந்த ஜனங்களும் அவன் மனக் கண்முன் தோன்றலாயின. அவன் தாய் சீனாவின் ஆசாரம் நிறைந்த அழகிய பெண்களைப் பற்றியும் தான் பிறந்து வளர்ந்ததென் சீனப் பட்டணத்தைப் பற்றியும் அடிக்கடி சொல்லி வந்திருக்கிறாள். அமெரிக்கப் பெண்களைப்போல் உதட்டுக்குச் சாயம், முகத்துக்கு பௌடர் முதலிய செயற்கை யழகுகளின்றி, இயற்கை ஸௌந்தர்ய வனிதைகள் வஸந்த காலத்தில் பட்டுப் பூச்சிகளின் பின்னால் துள்ளி ஓடும் காட்சி அவன் மனக் கண்முன் தோன்றிற்று. திடீரென்று தாய்நாட்டு ஆர்வ ஜ்வரம் அவனைப் பிடித்துக் கொண்டது. நாட்கள் ஆக ஆக அவன் தாபத் தியும் வளர்ந்து கொண்டே வந்தது. ஒவ்வொரு அற்ப விஷயத்திலும் சீனனாக நடந்துகொண்டானே யொழிய, அமெரிக்கனாகத் தென்படவில்லை அவன்.

இந்த ஸமயத்தில் சைனாவில் ஒரு பெரிய உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டது. சாங் தன்னுடன் மற்ற சீனர்களையும் சேர்த்துக்கொண்டு சீன அரசாங்கத்திற்கு பணம் திரட்ட ஆரம்பித்தான். தினமும் தன் சாப்பாட்டில் கொஞ்சம் மீத்திவைத்தான். கடைசியில் இடைவிடாத முயற்சியின் பயனாக 90 டாலர்கள் சேர்ந்தன. அவைகள் எதற்குதவுவதென்ற கேள்வி எழுந்தது. அனேக வாக்குவாதங்களுக்குப் பிறகு சீனாவில் சாலைகள் போடுவதற்காகக் கொடுப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. அதன்படியே தங்கள் கோரிக்கையை எழுதி அப்புதையல் சீன அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டது. ஆறுமாதம் கழித்து சீன அரசாங்க முத்திரையுடன் அவர்கள் தேச பக்திக்கு நன்றி பாராட்டி ஒரு கடிதம் வந்தது. சாங் அதைத் தன் ஹ்ருதயத்துடன் சேர்த்தணைத்துக்

கொண்டான். அவனுக்கு தாய் நாட்டினிடத்தில் முதல் தொடர்பு அது!

அவன் எதிர்காலத்தைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தான். எவ்வளவு சீக்கிரம் போக முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் தாய் நாட்டிற்கு போகவேண்டும். மூட்டை முடிச்சுகளை யெல்லாம் தயார் செய்தாய்விட்டது. மூன்றாம் வகுப்பு டிக்கட்டும் வாங்கிவிட்டான். அவன் தகப்பனார் தழுதழுத்த குரலில் சொன்னார்: "சாங்! பெருமையுடன் உன் சொந்த நாட்டிற்கு உன்னைத் திரும்ப அனுப்புகிறேன். அந்தத் தாயின் மடியில் உயிரை விடும் பாக்கியம் எனக்குக் கிட்டுமோ என்னமோ!"

பரிதாபகரமாக அமெரிக்க மோட்டார்களின் சாரியை நோக்கிக்கொண்டிருந்தான். இங்கே ஒன்றையும் அவன் விரும்பவில்லை. ஒன்றையும் பார்க்கக்கூட இஷ்டப்படவில்லை. ஸகலமும் சூன்யமாக தென்பட்டது. ஆனால் ஒரே ஒரு முகம் மட்டும் அவனுக்குத் தொந்திரவைக் கொடுத்துக்கொண்டே யிருந்தது. ஆம், அந்த சின்னஞ் சிறு வட்ட முகம் அவன் மனத்தில் புகுந்துகொண்டு சித்திரவதை செய்தது. அதை அடிக்கடி பார்க்க அவன் மனது விழைந்தது—மாலியின் முகத்தை. திடீரென்று அவனுக்கு சைனாவுக்குப் போக விருப்பமில்லை. ஏதோ ஒன்று அவன் பிரயாணத்தைத் தடை செய்தது. பார்க்கப்போனால் அவன் ஒருபொழுதும் மாலியை விரும்பினதில்லை. அவளை விவாகம் செய்துகொள்ளும் எண்ணம் அவனுக்கு லவலேசம்கூடக் கிடையாது. அப்படி அவன் விரும்பினாலும் மாலி இவனுக்கு இணங்க மாட்டவே மாட்டாள். எல்லாவற்றிற்கும் மேலாக சாங் மாலியை வெறுத்து வந்தான்!

ஆனால்......மாலியின் முகத்தை அவனால் மறக்க முடியவில்லை. மாலி பிடிவாத குணமுடையவள். அவளுக்கு அவளே ராணி. அவள் இஷ்டப்படாத ஒரு காரியத்தைச் செய்யும்படி தேவர்கள் முயன்றாலும் முடியாது. சாங் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு யோசனை செய்தான். மாலி அவனை மதிக்கமாட்டாள். எப்பொழுது பார்த்தாலும் அவனைக் கேலி செய்துகொண்டிருப்பாள்! ஏனென்றால், சாங் எப்பொழுது பார்த்தாலும் தாய் நாடு தாய் நாடு என பிதற்றிக்கொண்டிருப்பதால்! இப்பொழுதுதான் அவனுக்குப் பளிச்சென்று தெரிந்தது. ஒரு பிரயோஜனமுமின்றி சாங், மாலியைக் காதலிக்கிறான்!

இந்த எண்ணம் தோன்றத் தோன்ற மாலியைப் பார்க்காமல் ஒரு நிமிஷம்கூட அவனால் இருக்க முடியவில்லை. அன்று சனிக்கிழமை. அன்று கட்டாயம் மாலியைப் பார்க்காவிடில் தன் ஹ்ருதயம் ஆயிரம் சுக்கல்களாக வெடித்துவிடும் என எண்ணினான் சாங். ஜ்வரத்தில் பிரமை பிடித்தவன்போல் ஓடினான் மாலி வீட்டிற்கு. அவன் டை கட்டிக்கொண்டிருக்கவில்லை. தலை வாரப்படாமல் கலைந்திருந்தது.

(தொடரும்)



கிட்டுவின் துறவு

[பார்வதி, மங்களூர்]

என் நண்பன் கிட்டுவைப் பாராமல் ஐந்தாறு மாதங்கள் கழிந்துவிட்டது. சென்ற வருஷத்தில் அவனை அடிக்கடி, ஏன் மாதம் தோறும் சந்தித்துக்கொண்டிருந்த எனக்கு, இப்படி ஆறுமாதம் ஒரே அடியாய்ப்பார்க்காமலிருந்தது என்னவோபோல் இருந்தது. உடனே அவனுக்கு நான் அன்று ரயிலிலேயே புறப்பட்டு வருவதாய் ஒரு தந்தி கொடுத்துவிட்டு இரவு ரயிலில் புறப்பட்டு விட்டேன். ரயிலும் மறுநாள் காலை கிட்டு இருக்கும் ஊர் சேர்ந்தது. எனக்கு அதிகாலையில் காப்பி சாப்பிடும் பழக்கம் உண்டு. அதை அறிந்திருந்த கிட்டுவும் தர்மாஸில் காப்பியை எடுத்துக்கொண்டு காரை ஓட்டிக்கொண்டு ரயிலடிக்கு வந்திருந்தான். "மோப்பக் குழையும் அனிச்சம், முகம் திரிந்து நோக்கக் குழையும் விருந்து" என்பதைச் சமீபத்தில் தான் கிட்டு படித்திருந்தான். ஆகையால் நான் காரணமில்லாமல் திடீரென்று வருவதாகத் தந்தி அடித்திருந்தும் "என்னடா இவன் போது போகாத சமயமெல்லாம் வந்து கழுத்தறுக்கிறான்" என்று முகத்தைச் சுளித்துக் கொள்ளாமல் மலர்ந்த முகத்தோடு என்னை வரவேற்றான். ஆனால் எனக்குமட்டும் கிட்டுவிடம் ஏதோ நான் அதுவரை கவனித்திராத ஒரு புது மாறுதல் தென்பட்டது. அவனைப் பார்க்கையில் வெறிச்சு வெறிச்சென்றிருந்தது. எப்பொழுதும் அவனை விட்டுப் பிரியாத ஒரு வஸ்துவின் பிரிவை அது காட்டுவதுபோ லிருந்தது. திரௌபதியின் இஷ்டப்பிரகாரம், அச்வத்தாமாவைக் கட்டிப் பிடித்து வந்து, அவன் சிகரத்திலுள்ள ரத்தினத்தைப் பறித்து எடுத்த வுடன் அவனுக்கு தேஜஸ் குறைவு ஏற்பட்டதாகப் படித்திருக்கிறோம். இப்போது கிட்டுவுக்கு ஏற்பட்ட வெறுமை அதற்குமேல் இருந்தது. நான் வீடு செல்லுமட்டும் அதன் காரணத்தை நானே கண்டுபிடிக்க ஆனமட்டும் ஆலோசித்துப் பார்த்தேன். அவனைப் பற்றியதுமட்டும் அல்ல, அந்த வெறுமை அவன் காரில் ஏறிப்போகையில் அதிலுள்ள காற்றில் முதல்கொண்டு அந்த வித்யாசம் தெரிந்தது. நான் ஒருவாறாய் அதைக் கண்டுபிடித்துவிட்டதாக உணர்ந்து கிட்டுவைப் பார்த்து, "ஏனப்பா கிட்டு! நான் உனக்கு அதிக தொந்தரவு கொடுத்துவிட்டேன் போலிருக்கிறதே? என்னைக் கூட்டிப்போக அதிகாலையில் ரயிலுக்கு வரவேண்டி யிருந்ததால் உன் நீங்காத பாலியத் தோழனை சுருட்டை அவசரத்தில் எடுத்துவர மறந்து விட்டாயா? உன்னைப் பன்னிரண்டு வயதுமுதல் சுருட்டும் கையுமாகவே பார்த்துவந்

திருக்கிற எனக்கு, இப்படி சுருட்டில்லாமல் பார்க்கிறது என்னவோபோலிருக்கிறதே" என்றேன்.

அதற்குக் கிட்டு சொன்ன பதில் என்னைத் தூக்கி வாரிப்போட்டது. அதாவது அவன் சுருட்டை தொலைத்தே விட்டானும், அதுவும் எதற்காக என்று நினைக்கிறீர்கள். தனக்கு வேண்டிய நண்பன் ஒருவன் மாதம் ஐந்துரூபாய் சுருட்டுக்குச் செலவழிப்பதைப் பார்த்தானும். அவனுக்கு வருமானமே அவன் சம்சார செலவுக்குப் போதாது; அப்படி இருக்க சுருட்டுச் செலவு ரூபாய் ஐந்து. அஞ்சச் செலவினுல் வீட்டுக்கு வேண்டிய சில சாமான்கள் வாங்குவதை அவன் குறைப்பதையும் கண்டானும். கிட்டு சம்பந்தப்பட்ட வரையில் அவன் சுருட்டுச் செலவினுல் அவன் குடும்பத்துக்கு ஒன்றும் இடைஞ்சலில்லை. இருந்தாலும் தன் சிநேகிதன் குடும்ப நிலையிலிருந்து இவனுக்கு ஞானோதயம் ஆச்சுதாம். "நாம் நமக்குக் கட்டும் என்று இப்படி சுருட்டுக் குடித்துக்கொண்டிருக்கக்கூடாது. நம்மைப் பார்த்துப் பலர் இந்தப் பழக்கம் ஏற்படுத்திக் கொள்ளவும், தங்களுக்குக் கட்டாத பேர்கள் நம்மிடம் கட்டாயம் சுருட்டு இருக்கிறது என்ற தெம்பின்மேல் கடன் சுருட்டுப் பிடித்து வரவும் ஏதுவா யிருக்கிறதல்லவா?" என்று தீர்மானித்து அன்றே சுருட்டை விட்டொழித்தானும்.

எவ்வளவோ பேர் சுருட்டுப் பழக்கம் ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள்; விடுகிறார்கள். இதில் என்ன அதிசயம் என்று சொல்வதற்கில்லை. என் நண்பன் சுருட்டுப் பிடிக்க ஆரம்பித்தது இன்று நேற்று அல்ல. ஐம்பது வருடங்களுக்கு முன்னுல் தனது பத்தாவது வயதிலேயே திருட்டுத் தனமாய், தனக்கு இதர செலவுகளுக்குக் கொடுத்த சில்லறைகளைக் கொண்டு சுருட்டு வாங்கிக் குடித்தவன். பெரியவனுன பிறகும் தன் சம்பாத்தியம் என்று ஏற்பட்ட பிறகும் வாங்கிப் புகைத்த சுருட்டுகள் கணக்கெடுத்து முடியாது. ஒரு மேல்வாரிக் கணக்காய் போட்டால்கூட்டிகால் லக்ஷம்: அதாவது இருபத்து ஐயாயிர ரூபாய் புகைத்திருப்பான். அவனை எப்பொழுதும் சுருட்டும் கையுமாய்த்தான் பார்க்க முடியும். அவனை நாங்கள் "அடே கிட்டு தூங்கும் போதுகூட உன் தூக்கம் கலையாமல் சுருட்டுப் புகை உள்ளே செலுத்துவதற்கு யாராவது ஒரு மெஷின் கண்டுபிடித்தால் அதை நீதாண்டா முதலில் வாங்குவாய்" என்று பரிகாசம் செய்வதுண்டு. அவன் உடம்பில் ஏறியிருந்த சுருட்டுப் புகையின் மிகுதியால் அவனிடமிருந்து சதா சுருட்டு நாற்றம், பூண்டு தின்கின்றவர்களிடமிருந்து பூண்டு நாற்றம் கிளம்புவது போல் வெளிவரும். அதோடு அவன் ஏதாவது ஒரு இடத்திற்கு ஒருமணி நேரம் முன்பு சென்றிருந்தால்கூட யாதொரு துப்பறிபவர் உதவியும் இல்லாமல், நாம் அவனைக் கண்டு பிடித்துவிடலாம். ஏனென்றல், அவன் சென்ற இடத்துக் காற்றே, மத்ஸ்யகந்தி கதையாக, சுருட்டு நாற்றமாய் மாறிவிடும். இப்படிப் பட்டவன் ஒரே நாளில் அதுவும் பிறர் கஷ்டத்தைக்கண்டு தன் ஐம்பது வருட பிரியா நண்பனை சுருட்டை விட்டது பெரிய தியாகம் தானே!

பக்த சேதா

"தராசு"

"பக்திக்குச் சாதிமத பேதம் ஏதும் கிடையாது. பரமனை அடிவணங்கித் தொழ யாவருக்கும் உரிமை யுண்டு" என்ற இத் தத்துவத்தை, துர்யோதனன் அரசாண்டுவந்த காலத்தில் சேதா என்ற சக்கிலியன் மூலமாய் துரோணர் அறிகிறார் என்பதை, பக்த சேதா விஸ்தரிக்கிறது. ரஸமான கட்டங்கள் நிறைந்த கதை. தத்துவமும் மிகப் புனிதமானது. இக்கதையைப் படமாகத் தயார் செய்தது மிகவும் போற்றத்தக்கதே.

"வசனத்தில்" இலக்கணத் தமிழும், சாதாரணமாய் நாம் பேசும் தமிழும் கலந்து இருக்கிறது. சேதா, காந்தா, சேவா முதலிய மூவரும் இலக்கணத் தமிழ் பேசுகிறார்கள். ஆனால் துரோணரின் சிஷ்யர்கள் பேசுவதோ சாதாரணத் தமிழே. சில சமயங்களில் காந்தா, சேவா, சாந்தா இவர்களும் கூடச் சாதாரணத் தமிழை உபயோகிக்கிறார்கள். 'ழ' எல்லாம், காந்தாவிடம் 'ள' வாகவே விளங்குகின்றன. உணர்ச்சி மீறியபோது சாந்தா, 'அ' வை 'ஹ' வாக மாற்றி 'ஹத்புதம்' 'ஹப்பா', என்று உச்சரிக்கிறாள்.

அர்த்தத்திற்கு ஏற்ற அளவு, வரிகளைப் பிரித்து, சரியான இடங்களில் வேண்டிய அளவு நிறுத்திப் பாவம் ததும்பச் சேதா பேசுகிறார். இவருக் கடுத்தபடியாகத் துரோணரைச் சொல்லலாம். இலக்கணத் தமிழை மற்றவர்கள் தாளம் தவறாமல் பேசுகிறார்கள். ஆனால், இதன் லயம் கொஞ்சம் விளம்ப காலத்திலேயே இருக்கிறது. ஒருவர்க்கொருவர் பதில் சொல்லுவதிலும் தாமதம் செய்கிறார்கள். இவைகளால் ஸ்வாரஸ்யம் குறையத்தான் செய்கிறது. சரியாக "எடிட்" செய்து இவைகளை நீக்கி இருக்கலாம்.

"பாட்டு"களில் அர்த்தபுஷ்டி நிறைந்திருக்கிறது. பட்டமான ஹிந்துஸ்தானி மெட்டுகளில் சில பாட்டுக்கள் இருக்கின்றன. அம் மெட்டுகளில் முன்னமேயே சில கீழ்த்தரத் தமிழ் பாட்டுக்கள் இருக்கின்றன: அதே மெட்டுகளில் சில பாட்டுக்களை அமைத்தது விரஸமாக இருக்கிறது. "கன்னையா" என்பது தமிழ் வார்த்தை யல்ல. ஹிந்தி, மராட்டி முதலிய வட இந்திய பாஷைகளில் கண்ணனைக் குறிக்கும் வார்த்தை அது. பூக்காரியின் பாட்டு (4) சிப்பாய்களின் பாட்டு (18), சேதா பாடிய "ஏதுமறியேன்" (15) என்ற பாட்டு ஆகிய இம் மூன்று பாட்டுக்களும் அனுவசியமானவை. கதையின் விறுவிறுப்பை இவைகள் குறைப்பதால், இவைகளை வெட்டிவிடுவது நல்லதென்று தோன்றுகிறது. முக்யமாகச் சேதா பாடும் "மண்ணில் அரும் மானிடராய்" (19) என்ற விருத்தத்தின் நீளத்தைக் குறைக்கவேண்டியது அவசியம்.

சேதா மிகவும் நன்றாகப் பாடுகிறார். அதற்கடுத்தபடியாக சேவாவையும் காந்தாவையும் சொல்லலாம். சாந்தாவின் குரலில் விரிசல் சப்தம் சிறிது இருக்கிறது. குரல் பயிற்சியால் அதை நீக்கிக் கொண்டால் நடிகையின் மதிப்பு அதிகமாகும். "முரளீ தாரா" "கோகூலம்" என்ற தப்பு உச்சரிப்புகளைத் திருத்தி இருக்கலாம்.

"ஸ்ரீ ஹரே" (6) என்ற பாட்டில் "அண்ணல் வருக" என்ற அடியைப் பாடும்பொழுது உண்டான உணர்ச்சியையும், மயிர்க்கூச்சலையும், "கண்டேன்" (7) என்ற பாட்டின் "உண்டேன்", "சங்க சக்ரமுடன்" என்ற சரணங்கள் கெடுக்கின்றன. சேதா வீட்டிலிருந்து துரோணர் வீட்டிற்கு நேராகவே 'வைப்' (wipe) மூலம் கொண்டு போயிருக்கலாம்.

"நடிப்பில்" முதல் இடம் சேதாவிற்குத்தான். பிறகு வரிசைக் கிரமமாகத் துரோணர், சாந்தா, சேவா, காந்தா, சிஷ்யர்கள் ஆகியவர்களுக்கு இடம் கிடைக்

கிறது. ஸ்ரீ தேவியும் பூதேவியும், பொன்னுயியாகவும், புறத்தாயியாகவும் தான் இருக்கத் தகுந்தவர்கள்.

"ஹாஸ்யம்" மட்ட ரகந்தான். சிஷ்யர்களின் ஹாஸ்யம் இம்மாதிரிப் புராணப் படத்திற்குத் தகுந்ததல்ல. செருப்பு வாங்கப் பேரம் செய்யும் பிராமணரின் பேச்சு அடியுடன் இப் படத்திற்குத் தகுந்ததல்ல.

"எதிர்பாராத ஹாஸ்யம்" துரோணர் மூர்ச்சையாவதே. அதற்கு முன்னர் சிஷ்யர்கள் செய்யும் கூத்து அதற்குக் காரணமாகி, அதற்குப் பிறகும் அவர்கள் ஆடும் ஆட்டத்தால் அது அதிகமாகிறது. இம்மாதிரியான இடத்தில் ஹாஸ்யத்தை நுழைத்ததினால், அவ்விடத்தில் துரோணர் நடிப்பின் சோபை மறைகிறது.

"படப் பிடிப்பு" சுமார்தான். தியாக பூமி அளவுகூட இல்லை. "Light and shade effect" இல்லாமல் படம் பிடித்திருப்பதே இதன் காரணம். பட ஆரம்பத்தில் சேதாவும் காந்தாவும் பேசிக் கொள்ளும் 'ஷாட்டின்' கோர்வை (Composition) சரியாக இல்லை. உட்கார்ந்திருக்கும் சேதா மிகச் சிறியவராகத் தோன்றுகிறார். உயர் தளத்திலிருந்து படம் பிடித்திருக்கக் கூடாது.

"ஒலிப்பதிவு" நன்றாக இருக்கிறது. ஆனால் சில இடங்களில் பேச்சின் சப்தம் குறைவாக இருக்கிறது. செருப்புகளைத் தானம் செய்த பிறகு தன் மனைவியைச் சந்தித்துப் பேசும் சேதாவின் பேச்சை, இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். இதைத் திருப்பி எடுத்திருக்கலாம்.

"எடிடர்" தன் வேலையைச் சரியாகச் செய்யவில்லை. ஷாட்டுகளுக்கு முன்னும் பின்னும் அனாவசியமாகக் குறைந்தது 15 தனிப் படங்கள் (Frames) விட்டு வைத்திருக்கிறார். "க்ளோஸ் அப்" களில், அடுத்து வரும் சம்பாஷணைகளை, உயரத் தூக்கிடும் முறை (Lifting up the sound) அவருக்குத் தெரியாதுபோல் இருக்கிறது. இல்லாவிட்டால், சம்பாஷணைகளை அடுத்துக்கொண்டு வராமல், ஷாட்டுகளின் இடையில் நிசப்தமாக இவ்வளவு இடம் விட்டிருக்கமாட்டார். இவைகளைக் கத்தரித்தால் சுமார் 600 அடியாவது நீளம் குறையும். படத்தின் விறு விறுப்பும் அதிகமாகும். சேதாவின் வீடு எரியும்போது, கட்டப்பட்டிருக்கும் சாந்தாவைக் காண்பிக்கும் முதல் இடைப் பதிப்பில் (Insert) சாந்தாவின் மீது நிழல் ஒன்று ஓடுகிறது. இது போலவே, சேதா வீட்டிலிருந்து திரும்பிய சாந்தா, துரோணரை முதல் தடவை சந்திக்கும்பொழுது, அவர்களிருவரும் சேர்ந்திருக்கும் (Composite close shot) ஒன்றில் மடக்குக் கட்டை (Clapper) அடிப்பவனின் நிழல் இருக்கிறது. இவைகளைக் கத்தரிக்காமல் விட்டது எடிடரின் கவனக் குறைவைக் காட்டுகிறது.

"உடைகள்" எல்லாம் வட இந்திய உடைகளே. சட்டை, குல்லாய்கள் ஏன்? பாரதம் நடந்த காலத்தில் இவைகள் ஏது? அப்படியே இருந்தாலும் தற்கால வட இந்திய உடைகளா அப்பொழுது இருந்தன? நடிகர்களுக்கு சட்டை, தலைப் பாகைகள் மாட்டி விடவேண்டுமென்றிருந்தால், பிரபாத் கம்பெனியார்போல், இதுவரை நாம் கண்டிராத புதுமாதிரி உடைகளை அணிவித்திருக்கலாம்.

"காட்சி ஜோடனை" நன்றாக இருக்கிறது. ஆனால் துர்யோதனன் கோமுக மேடையின் (Balcony) முன் பக்கச் சுவராக விளங்கும் துணியைச் சுருக்கமின்றிச் சட்டத்தில் இசைத்திருக்கலாம்.

"டைரக்ஷன்" தியாக பூமி அளவு இல்லை. தன் திறமைமுழுவதையும் டைரக்டர் உபயோகிக்கவில்லை. சில கட்டங்களை அனாவசியமாக வளர்த்தி யிருக்கிறார். சேதாவைத் தண்டிக்கு முன் சேவகர்களின் ஆட்டமும் பாட்டும் அனாவசியம். காந்தா தன் கண்களைப் பிடுங்கிக் கொண்டதைக் காட்டினவர், கண்ணும் கையும் இழந்த சேதாவையும் காட்டி இருக்கலாம்; அல்லது சேவகர்கள் அவரை வதை செய்ய ஆரம்பிக்கும் வரையாவது காட்டிக் காந்தாவின் கூக்குரலுடன் முடித்திருக்கலாம். வைகுண்டத்தில் மற்றவர்களுக்குக் கண் குருடாவதற்குப் பதிலாகத் திருமாலின் கண்களிலிருந்து இரத்தம் வழிவதாகக் காட்டி யிருக்கலாம். கோழ

கொழு என்றிருக்கும் (படத்தில்) விஷ்ணுவே வந்து சேதாவின் வீட்டில் சாப்பிடுவதற்குப் பதிலாகப் பால கிருஷ்ணன் சாப்பிடுவதாகக் காட்டி யிருந்தால் அழகாக இருந்திருக்கும். செருப்புகளை வீட்டில் பரப்பினது சிரிப்பை உண்டாக்குகிறது. மலைபோல் குவித்திருக்க வேண்டும். தீண்டாதோர் வீட்டில் நுழைந்து திரும்பிய தன் மகளைத் துரோணர் முதல் தடவை பேசாது விட்டு விட்டுப் பிறகு இரண்டாவது தடவை அவள் செய்த அக் குற்றத்திற்காகப் பிராயச் சித்தம் செய்ய ஏற்பாடு செய்வதின் நியாயம் தெரியவில்லை. துரோணர்மீது பழி சுமத்துவது கெட்டிக்காரத்தனமல்ல. தன் திறமையால் டைரக்டர் இக்குற்றத்தை நீக்கி இருக்க வேண்டும். எரியும் வீட்டிற்குள் அமர்ந்து, சேதா, சேவா, சாந்தா, காந்தா ஆகியவர்கள், வெளியே வராமல் பாடிக் கொண்டிருப்பதேன்? அதற்குப் பதிலாகப் பாடிக் கொண்டே, திருமாலின் விக்ரஹத்தை எடுத்துக் கொண்டு வெளியே வந்திருக்கக் கூடாதா? எப்படி இருந்தாலும் இக்கட்டத்தை இவ்வளவு வளர்த்திருக்க வேண்டாம். துரோணர் மன்னிப்புக் கேட்பதுடன், கதையை முடித்திருக்கலாம். அதற்குப் பிறகு நடக்கும் பிரசங்கம் மிகையாகவே இருக்கிறது.

“ரஸமான கட்டங்கள்” (1) “ஸ்ரீ ஹரே” என்ற பாட்டும், திருமால், சேதாவின் வீட்டில் உண்ணுவதும். (2) சேதாவின் வீட்டிலிருந்து திரும்பிய சாந்தாவைத் துரோணர் கோபித்துக் கொள்ளும் இடம். (3) சிறுவர்களைக் கட்டி அடிக்கும் பொழுது சாந்தாவின் பேச்சு. (4) சேதாவை விட்டு விடும்படி துரோணரிடம் சாந்தா மன்றாடுவது. (5) துர்யோதனனுக்குச் சேதா பதிலளிப்பது. (6) காந்தா தன் கண்களைப் பிடுங்கிக் கொள்வது.

“சேதாவின் வீட்டில் பாலகிருஷ்ணன் சாப்பிடுவதாகக் காட்டவேண்டு”மென்று கூறிய யோஜனையை யாராவது ஆக்ஷேபிக்கலாம். “பாண்டவர் வனவாஸம் செய்துகொண்டிருந்த அக்காலத்திலேயே இருந்த கிருஷ்ணன், கடவுளாக வருவது உசிதமாகாது” என்று காரணம் சொல்லலாம். ஆனால் அவ்விதம் கூறுபவர், “முரளீதரா நந்த யசோதை குமாரா, ஸ்ரீ ராஜகோபாலா, கோகுல பாலா, கன்னையா” என்று, பக்த சேதாவிலுள்ள பாட்டுக்களில், கிருஷ்ணனைத் துதித்துக் குறிக்கும் வார்த்தைகளை, ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். இவைகளால் கண்ணன் கடவுளாக விளங்கினான் என்று ஆகிறது. “இம்மாதிரியான பதங்களை உபயோகித்திருக்கக் கூடாது. இது டைரக்டரின் தவறுதல்” என்று மறுபடியும் அவர் ஆக்ஷேபிக்கலாம். ஆனால் கிருஷ்ணன் திருமாலின் அவதாரம் என்பது யாவரும் அறிந்த விஷயம். பாரத காலத்திலேயே கிருஷ்ணனைக் கடவுளாக மதித்து வந்தார்கள். கீதாசார்யனின் வார்த்தைகளும் இதற்கு அத்தாட்சியாக இருக்கின்றன. ஆகையால் இதை அடிப்படையாகக் கொண்டு, திருமாலின் விக்ரஹத்தை முதலில் திருமாலாக உயிர் கொடுத்து “உரு மயக்கம்” (Dissolve) செய்து, உடனே அவரை மறுபடியும் பால கிருஷ்ணனாக “உரு மயக்கம்” செய்து டைரக்டர் தன் திறமையைக் காட்டி இருக்கலாம். ஆட்சேபனைகளுக்கெல்லாம் இடமும் இருக்காது.

இக்குறைகள் படத்தின் உயர்வைக் குறைக்கின்றன. இக்குறைகள் இல்லாதிருந்தால், தமிழ் நாட்டின் உயர்ந்த படங்களுள் ஒன்றாகப் பக்த சேதாவும் இருந்திருக்கும்.

LIBRARY